محمد صلى الله عليه وسلم

# பேரொளிப் பிழம்பு

பேராசிரியர்: கே.எஸ். இராமகிருஷ்ணராவ்

இலங்கை ஜமாஅதே இஸ்லாமி வெளியீடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முஹம்மத் (ஸல்)
# பேரொளிப் பிழம்பு

சிறந்த போட்டோ ஸ்டேற்
பிரதிகளுக்கு நாடுங்கள்
போட்டோ ரியோ
பிரதான-வீதி,
கல்முனை.

ஆங்கில மூலம் :

**பேராசிரியர் கே. எஸ். இராமகிருஷ்ணராவ்**

A. MUZZ-ZAMMIL

வெளியிடுவோர் :

**இலங்கை ஜமா அதே இஸ்லாமி**
204/1, ஸ்ரீ வஜிரஞான மாவத்தை,
கொழும்பு-9.
ஸ்ரீ லங்கா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

MUHAMMAD
THE PROPHET OF ISLAM
(TAMIL)

FIRST EDITION - JANUARY 1982

முதற் பதிப்பு - ஜனவரி 1982

AUTHOR :
Prof. K. S. RAMAKRISHNA RAO

TRANSLATED BY :
Dr. A. R. A. HAFEES

PUBLISHED BY :
CEYLON JAMA'ATH-E-ISLAMI
204/1, Sri Vajiragnana Mawatha,
Colombo-9. (Sri Lanka)
Cable : 'CEYJAMAAT' Colombo
Phone : 92760

PRINTED BY :
S. H. NILABDEEN
I.P.C. PRINTING PRESS
320, N.M.M. ISHAK MAWATHA,
COLOMBO-9.
Phone : 598771

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

بِسْمِ اللهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ

# முன்னுரை

அகிலத்தாருக்கு அல்லாஹ்வின் அருட்கொடையான அண்ணல் முஹம்மத் (ஸல்) பிறந்த இம் மாதத்தில் அவர்களைப் பற்றியதோர் அருமையான நூலை வெளியிடுவதில் பெரு மகிழ்ச்சியடைகிறோம்.

நபிமணி முஹம்மத் (ஸல்) அவர்களை எந்த மனிதர் நோக்கினாலும், வாழ்வின் எக் கோணத்திலிருந்து நோக்கினாலும் அவர்களது சிறப்புக்களைக் கண்டு வியப்படையாதிருக்க முடியாது.

உங்கள் கரங்களில் தவழும் இந்நூல் பேராசிரியர் கே. எஸ். இராமகிருஷ்ணராவ் அவர்களால் ஆங்கிலத்தில் எழுதப்பட்டதாகும். இவர், இந்தியாவின் கர்னாடக மாநிலத்தில் உள்ள மைசூர் அரசினர் மகளிர் கல்லூரியின் தத்துவவியல் துறைத் தலைவர் என்பது குறிப்பிடத்தக்கது.

இதில் இஸ்லாத்தையும், அல்லாஹ்வின் இறுதித் தூதரையும் பற்றி பேராசிரியர் எழுதியுள்ள கருத்துக்கள் முஸ்லிம்களும், முஸ்லிம் அல்லாதாரும் படித்துப் பயன்பெறத் தக்கவை.

இலங்கை ஜமாஅதே இஸ்லாமி இந் நூலை வெளியிடுவதன் நோக்கம், பிறமதத்தவரின் பாராட்டுக்களை முன்வைத்து இஸ்லாத்திற்குப் புகழ் ஈட்டிக் கொடுப்பதல்ல. இஸ்லாம் ஒன்றே பரிபூரணமான வாழ்க்கை முறை; அதனைப் போதித்த இறையோனின் இறுதித் தூதர் முஹம்மத் (ஸல்) அவர்கள், அனைவருக்கும் முன்மாதிரியானதும் நடுநிலையானதும் ஏற்றத் தாழ்வற்றதுமான உன்னதச் சமுதாயமொன்றை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உருவாக்கினர்கள். இந்த இருபதாம் நூற்றண்டிலும் இனிவரும் காலங்களிலும் மனித குலத்தின் விமோசனம் அல்-குர்ஆனின் போதனைகளையும் இறைதூதரின் வழி முறையையும் உவந்தேற்றுக் கொள்வதிலேயே தங்கியிருக் கிறது என்று ஜமாஅதே இஸ்லாமி வலியுறுத்திவருகிறது. இக் கருத்துக்களை முஸ்லிமல்லாதவர்கள்கூட ஏற்றுக் கொள்கிருர்கள் என்பதை உணர்த்துவதே இந் நூலை வெளியிடுவதன் நோக்கமாகும்.

பேராசிரியரைப் போன்ற பிறசமயத்தவர்களே இஸ்லாமிய வாழ்க்கை முறையைப் போற்றிப் புகழும் போது, முஸ்லிம்களாகிய நாம் அதனை முழுமையாக ஏற்றுச் செயல்படுவது எத்துணை முக்கியம் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும்.

இந்நூலை அழகிய தமிழ்நடையில் மொழிபெயர்த்து தவிய டாக்டர் ஏ. ஆர். ஏ. ஹபீஸ் அவர்களுக்கு எமது நன்றி உரித்தாவதாக.

இதுவரை எமது வெளியீடுகளை ஆர்வத்தோடு வாங்கிப் படித்து, பயனடைந்த வாசகப் பெருமக்க ளின் நல்லாதரவு இந் நூலுக்கும் கிட்டும் என்பது எமது நம்பிக்கை.

அல்ஹம்துலில்லாஹ்!

எம். கே. எம். மஹ்ரூஃப்
அமீர்

இலங்கை ஜமாஅதே இஸ்லாமி

204/1, ஸ்ரீ வஜிரஞான மாவத்தை,
கொழும்பு-9.
ரபீயுல் அவ்வல், 1402
ஜனவரி, 1982

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 1

முஸ்லிம் வரலாற்ருசிரியர்களின் கூற்றுப்படி, முஹம்மத் (ஸல்) அவர்கள் அரேபிய பாலைவனத்தில் கி.பி. 571 ஆம் ஆண்டு ஏப்ரல் 20 ஆந் திகதி பிறந்தார்கள். முஹம்மத் என்ருல் ''பெரும் புகழ் பெற்றவர்'' எனப் பொருள்படும். அவர்களை நான் மனிதருள் மாணிக்கமாக மதிக்கிறேன். அந்தக் கொதிக்கும் மணற்பரப்பில் முஹம்மத் (ஸல்) அவர்களைப் போன்ற இன்னொரு மனிதர் — அவர் ஒரு மகாகவியாயிருந்தாலென்ன, மாமன்னராயிருந்தாலென்ன — முன்னரும் தோன்றியதில்லை; பின்னரும் தோன்றவில்லை.

வெறுமை படர்ந்திருந்த அந்தப் பாலை நிலத்தில் முஹம்மத் (ஸல்) என்ற வலிமை மிக்க ஆன்மாவின் வருகையைத் தொடர்ந்து ஒரு புத்துலகே உருவாயிற்று. புத்துயிர், புத்துணர்வு, புதுப்பண்பாடு, புது நாகரிகம், புதிய பேரரசு என்பன எழுச்சியுற்றன. இவற்றின் செல்வாக்கினுல் ஆசியா, ஆபிரிக்கா, ஐரோப்பா ஆகிய முப்பெரும் கண்டங்களிலும் வாழ்ந்த மக்களின் சிந்தனைப் போக்கிலும், வாழ்க்கை முறையிலும் மகத்தான மாறுதல்கள் ஏற்படலாயின.

இறைதூதர் முஹம்மத் (ஸல்) அவர்களைப் பற்றி எழுதுவதற்கு எண்ணியபோது எனக்குச் சற்றுத் தயக்கமாகத்தானிருந்தது. ஒருவர் தான் சார்ந்திராத சமயத்தைப் பற்றி எழுதுவது ஒரு சங்கடமான விஷயம். அவ்வாறே பல் வேறு சமயங்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களைப் பற்றியும் போதியளவு அறிந்து வைத்திருப்போரும், ஒரே சமயத்துக்குள்ளேயே ஏதாவதோர் உட்பிரிவை ஆதரிப்போரும் இருக்கத்தக்கதாக நான் இந்த நுட்பமான காரியத்தில் ஈடுபடுவது பொருத்தமானதா எனவும் சிந்தித்தேன்.

சமயம் முற்றுமுழுதாக ஒவ்வொருவரதும் தனிப்பட்ட விஷயம் என சில வேளைகளில் உரிமை பாராட்டப்பட்டாலும் கூட, பொதுவாக பிரபஞ்சத்தில் அறியப்பட்டவற்றையும் அறியப்படாதவற்றையும் தழுவிநிற்கும் தன்மை அதில் தங்கியிருக்கிறது. சமயம் நமது உள்ளத்தோடும் உணர்வோடும் ஒன்றிப்போயிருக்கிறது. அது ஒரு நேரத்தில் இல்லாவிடின் மற்றொரு நேரத்தில் நமது இருதயத்தையும் ஆன்மாவையும் மனதையும், மேல் மனம், அடிமனதையும்- மற்றும் எல்லாப் பாகங்களையும் ஊடுருவி நிற்கிறது. நமது கடந்த காலம், நிகழ்காலம், எதிர்காலம் பற்றி நாம் பூண்டுள்ள உறுதியான நம்பிக்கைகள் அத்தனையும் சமயம் என்ற நுண்ணிய நூலிழையின் ஊடாகத் தொடுக்கப்படும்போதுதான் இந்தப் பிரச்சினை அதிக அளவிலான முக்கியத்துவத்தைப் பெறுகிறது. நாம் அதிக உணர்ச்சிவசப்படக்கூடியவர்களாக இருக்கும் பட்சத்தில் ஈர்ப்பு சக்தியின் மையப் புள்ளியான இதயம் எப்பொழுதும் பரபரப்பான நிலையிலேயே இருக்க நேருகின்றது. எனவே மற்றவர்கள் பின்பற்றும் மதங்களைப் பற்றிப் பேசுவதைவிட, பேசாமல் விடுவதே சிறந்தது எனத் தோன்றுகிறது. எமது சமய நெறிகள் எம் இதய ஆழியின் அடித்தளத்தில் மறைந்து கிடக்க, இறுக மூடிய எமது அதரங்கள் அவற்றுக்குப் பாதுகாப்பாக அமைவதே சிறந்தது என்றும் எண்ணத் தோன்றுகிறது.

இந்தப் பிரச்சினையின் இன்னோர் அம்சத்தையும் நாம் கவனிக்கவேண்டும். அதாவது மனிதன், சமூகத்தின் ஓர் அங்கம். நாம் ஒருபோதும் தனித்துவாழ முடியாது. விரும்பியோ விரும்பாமலோ, நேரடியாகவோ மறைமுகமாகவோ மற்றும் பலரது வாழ்க்கையோடு நம் ஒவ்வொருவரது வாழ்க்கையும் பின்னிப் பிணைந்திருக்கிறது. ஒரே நிலத்தில் விளையும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உணவையே நாம் உட்கொள்கிறோம்; ஒரே ஊற்றிலிருந்து வெளிப்படும் நீரையே பருகுகிறோம்; ஒரே சுற்றுடலில் உள்ள காற்றையே சுவாசிக்கிறோம். ஆகையால், எமது கருத்துக்களை நாம் இறுகப் பற்றிப் பிடித்திருக்கும் அதேவேளையில் பிற மதத்தைச் சார்ந்த எங்களது அயல்வீட்டு அன்பரின் மனப்போக்கு எத்தகையது, அஃது அவரது செயலில் எந்த அளவுக்குப் பிரதிபலிக்கிறது என்பதைப் பற்றிச் சிந்திப்பது குறைந்த பட்சம் நமது சூழலைப்பற்றிப் புரிந்துகொள்வதற்கும் அதற்கேற்ப நடந்து கொள்வதற்குமாவது நமக்கு உதவுமல்லவா? இந்தக் கண்ணோட்டத்தில் இதர சமயங்களைப் பற்றி ஆராயமுற்படுவது நமக்கு அருகில் இருப்போரையும், அப்பால் இருப்போரையும் பரஸ்பரம் புரிந்து கொள்ளவும், அவர்களோடு சிநேகபான்மையோடு பழகிக்கொள்ளவும் பயன்படும்.

மேலும் மேற்பரப்பில் தோற்றமளிப்பது போல நமது சமயச் சிந்தனைகள் சிதறுண்டு காணப்படுவதில்லை. இச் சிந்தனைகள் இவ்வுலகின்கண் வாழும் கோடிக்கணக்கான மக்களின் வாழ்க்கையை நெறிப்படுத்தி இயங்கச் செய்கின்ற மாபெரும் உலக மதங்களை கருக்களாகக் கொண்டு சுற்றிச் சுழல்கின்றன. எனவே, உலகப் பிரஜைகள் என்ற இலட்சியத்தை நாம் அடையவேண்டுமென்ற நோக்கமிருந்தால் மனித சமுதாயத்தை வழிநடத்திச் செல்லும் சமயங்களைப் பற்றி அறிந்து கொள்வதற்கு நாம் சிறிதளவாவது முயற்சி மேற்கொள்வது நமது கடமையாகும்.

சமயம் சம்பந்தப்பட்டவரையில் மேற்சொன்ன ஆரம்பக் குறிப்புகள் எவ்வாறிருப்பினும், அங்கு நுண்ணறிவுக்கும் உணர்ச்சிக்கும் இடையே அடிக்கடி மோதல் நிகழ்ந்த வண்ணமேயிருக்கிறது. இதனல் சமயத்துறையில் அடியெடுத்து வைக்கும்போது அது வழுக்கும் தன்மையுடையதாக இருப்பதைக் காண்கிறோம். இதனை எண்ணிப் பார்க்கையில் அறிவுடையோர் அடிவைக்க அஞ்சும் இடங்களுக்கு ஓடிச்செல்ல அறிவிலிகள் அவசரப்படுகின்ற நிலைமையே நினைவுக்கு வருகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்னொரு கோணத்திலிருந்து நோக்கும்போது இஃது இன்னும் சிக்கலாகிறது. அதாவது நான் எழுதுவதற்கு எடுத்துக் கொண்ட விஷயம், வரலாற்று உண்மைகளோடு கூடிய ஒரு சமயத்தைப் பற்றியதும், ஒரு வரலாற்று நாயகராகத் திகழும் அதன் இறைதூதரைப் பற்றியதுமாகும். இஸ்லாத்தில் குறைகாணும் நோக்கத்தோடு அதனை விமர்சிக்க முற்பட்ட சேர் வில்லியம் முயீர் கூட, திருக்குர்ஆனைப் பற்றிக் குறிப்பிடும்போது ''இவ்வுலகில் பன்னிரண்டு நூற்றாண்டுகளாக தூய்மை கெடாது நிலைத்து நிற்கும் ஒரே நூல் நிச்சயமாகத் திருக்குர்ஆனேயாகும்'' என்கிறார். இதற்கு மேலதிகமாக நானும் ஒன்றைக் கூற விரும்புகிறேன். அதுதான் முஹம்மத் (ஸல்) ஒரு சரித்திர புருஷர். அவர்களது வாழ்க்கையில் நடந்த ஒவ்வொரு சிறு நிகழ்ச்சியுமே வெகு கவனமாக அவதானிக்கப்பட்டு, பதிவு செய்யப்பட்டுள்ளது. அவர்களைப் பற்றிய நுண்ணிய விபரங்கள்கூட பிற்கால சந்ததியினருக்காகப் பேணிப் பாதுகாக்கப்பட்டே வந்துள்ளன. அவர்களது வாழ்க்கையிலோ அன்னார் நிகழ்த்திய சாதனைகளிலோ மர்மம் எதுவுமேயில்லை. இவற்றின் பயனாக அவர்களைப் பற்றிய சரியான தகவல்களை அறிந்து கொள்ள யாரும் சிரமப்பட்டு அலைந்து திரியத் தேவையில்லை.

அரசியல் மற்றும் காரணங்களுக்காக விஷமிகள் இஸ்லாத்திற்கு தவறாக விளக்கம் கற்பித்த காலம் மலையேறிவிட்டது. இதுபற்றி ''கேம்பிரிட்ஜ் மத்திய கால வரலாறு'' என்ற நூலில் பேராசிரியர் பெவன் ''ஐரோப்பாவில் பத்தொன்பதாம் நூற்றாண்டிற்கு முன்னர் முஹம்மது (ஸல்) அவர்களைப் பற்றியும் இஸ்லாத்தைப் பற்றியும் வெளியிடப்பட்டவற்றை வெறும் இலக்கியப் புதுமைகளாகவே நாம் கருதவேண்டியிருக்கிறது'' என்கிறார். பொதுவாகப் பார்க்கப்போனால், இஸ்லாத்தைப் பகைமைக் கண்கொண்டு நோக்கும் வரலாற்று நூல்கள் இப்போது அருகிவிட்டன. இதன் பயனாக இந்நூலை எழுதும் எனது பணியும் இலகுவாயிற்று.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதாரணமாக, ''இஸ்லாம் வாளினால் பரப்பப்பட்டது'' என்று இப்பொழுது யாரும் கூறுவதில்லை. மாறாக, ''சமய நெறியில் பலவந்தமில்லை'' என்ற கருத்தைப் பரவலாக அனைவரும் அறிந்துள்ளனர்.

உலகப் பிரசித்திபெற்ற வரலாற்றாசிரியரான கிப்பன் என்பவர் எழுதியிருப்பதாவது, ''ஏனைய சமயங்களை வாளினால் ஒழித்துக் கட்டுவதே முஹம்மதியர்களின் கடமை என்ற கருத்து உண்மைக்கு முரணானது. அறியாமை காரணமாகச் சுமத்தப்படும் அந்த வெறித்தனமான குற்றச்சாட்டை மறுப்பதற்கு திருக்குர்ஆனும், முஸ்லிம் வெற்றி வீரர்களின் வரலாறும், அவர்கள் வெளிப்படையாகவும் சட்டபூர்வமாகவும் கிறிஸ்தவ சமய ஆராதனை விஷயத்தில் காட்டிய சகிப்புத் தன்மையுமே போதுமான சான்றுகளாகும்.''

முஹம்மத் (ஸல்) அவர்களது வாழ்க்கை மிகவும் வெற்றிகரமாய் அமைந்ததற்குக் காரணம், அவர்களது ஒழுக்கப் பண்பின் பலமேயன்றி, வாள்முனையின் வன்மையன்று.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2

முற்காலத்தில் அரேபியாவில் கோத்திரங்களுக்கிடையே பகைமை நிலவியது. அற்ப விஷயங்களுக்குக்கூட அவர்கள் சண்டையிட்டுக் கொண்டார்கள். ஒரு கோத்திரத்தைச் சார்ந்த அதிதி ஒருவரின் ஒட்டகை, இன்னொரு கோத்திரத்தினருக்குச் சொந்தமான மேய்ச்சல் நிலத்துள் நுழைந்த காரணத்தினுல் மூண்ட சண்டையானது நாற்பதாண்டுகள் தொடர்ந்து நடந்தது. இரு தரப்பிலுமாக எழுபதாயிரம் உயிர்கள் பலியாகின; அவ்விரு கோத்திரங்களும் அழிந்து போமோ என அஞ்சுமளவுக்கு அச்சண்டை நீடித்தது.

இத்தகைய முரட்டு அரபிகளுக்கு முஹம்மது (ஸல்)அவர்கள் நன்னடத்தையையும், கட்டுப்பாட்டையும் கற்றுக் கொடுத்தார்கள். இதன் காரணமாக அக் காட்டரபிகள் போர்க்களத்திற்கூட ஐவேளைத் தொழுகையை நிறைவேற்றும் பண்பாளர்களாகப் பரிணமித்தனர்.

சமாதான முயற்சிகள் பயனற்றுப் போய், தற்காப்பின் நிமித்தம் அவர்கள் போர்க்களத்தில் இறங்க வேண்டிய நிர்ப்பந்தத்திற்குள்ளானபோது இஸ்லாத்தின் இறைதூதர் போர் உபாயங்களையே முற்ருக மாற்றி அமைத்தனர். அரேபியத் தீபகற்பம் முழுவதும் இஸ்லாமியக் கொடியின் கீழ் கொண்டு வரப்படும் வரை, நபிகள் நாயகத்தின் வாழ்நாளில் நடைபெற்ற போர்களில் உயிரிழந்தோர் சில நூறு பேர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களேயாவர். நாள் தோறும் ஐவேளை தொழுவதற்கு—தனித் தனியாகவன்றி, போர்க்களத்தின் அமளிதுமளிகளுக்கிடையே கூட்டாகச் சேர்ந்து தொழுவதற்கு- இஸ்லாத்தின் இறை தூதர் மிலேச்ச அரேபியருக்குப் பயிற்சியளித்தார்கள். தொழுகைக்குரிய நேரம் வந்தால் கூட்டுத் தொழுகையைக் கைவிடவோ ஒத்திவைக்கவோ முடியாது. போரில் ஈடுபட்டிருக்கையில் தொழுகைக்குரிய நேரம் வந்துவிட்டால் ஒரு சாரார் எதிரிகளுடன் சண்டையிட மற்றொருசாரார் தொழுகையை நிறைவேற்ற வேண்டும். முன்னவர் தொழுகையை முடித்துக் கொண்டதும் போரில் ஈடுபட, பின்னவர் தொழுகையை நிறைவேற்ற வேண்டும். நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அளித்த ஒழுக்கக் கட்டுப்பாட்டுப் பயிற்சி இத்தகையதாக அமைந்தது.

காட்டுமிராண்டித்தனம் மிகைத்திருந்த ஒரு கொடிய காலகட்டத்தில் போர்க்களத்தில்கூட மனிதாபிமானம் கடைப்பிடிக்கப்பட்டதை மறக்க முடியுமா? முஹம்மத் (ஸல்) அவர்கள் உணர்த்திய யுத்த நீதியைச் சிறிது ஊன்றிக் கவனியுங்கள்:- ''எவரையும் வஞ்சிக்காதீர்கள்; ஏமாற்றாதீர்கள்; வாக்குறுதிக்கு மாறுசெய்யாதீர்கள்; உறுப்புகளை ஊனப்படுத்தாதீர்கள்; குழந்தைகளேயும், பெண்களேயும், வயோதிபர்களேயும் கொலே செய்யாதீர்கள்; கனிதரு மரங்களே வெட்டாதீர்கள்; எரிக்காதீர்கள்; வணக்கத்தில் ஈடுபட்டிருக்கும் மத குருக்களேயும், மனிதர்களேயும் வதைக்காதீர்கள்.''

இறைதூதர் புனித மக்காவை வெற்றி கொண்டபோது நடந்து கொண்ட விதம், ஏனையோருக்கும் உன்னதமான ஒரு முன்மாதிரியாகத் திகழ்கின்றது. அந்த வெற்றிப் பிரவேசத்தின்போது முஹம்மத் (ஸல்) அதிகாரத்தின் உச்சத்தில் வீற்றிருந்தனர். அவர்களது பொன்னான போதனைகளைச் செவிமடுக்க மறுத்த நகரம், அவர்களேயும் அவர்களைப் பின்பற்றியோரையும் அணுவணுவாகச் சித்திரவதைக்கு உள்ளாக்கிய அந் நகரம், அவர்களேயும் சகாக்களேயும் துரத்தியடித்த அதே நகரம், இரு நூறு மைல்களுக்கு அப்பால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்னொரு நகரில் அகதிகளாய்ச் சென்று அவர்கள் குடியேறிய பின்னரும் தொல்லைக்கு மேல் தொல்லை கொடுத்துக் கொண்டிருந்த நகரம் அப்போது அவர்களது காலடியில் மண்டியிட்டுக் கிடந்தது. இறைதூதர் நினைத்திருந்தால் அதுவரை இழைக்கப்பட்ட கொடுமைகளுக்கு யுத்த விதிகளுக்கமையவே வஞ்சம் தீர்த்துக் கொள்ள வர்ய்ப்புகள் பல இருந்தன. ஆனால், அந்தக் கருணைவள்ளல் மக்களைக் கருவறுக்க வரவில்லை. அத்தனை பேரையும் மன்னித்தருளினார்கள். மனிதப் பிறவிகளை ஒன்றுபடுத்துவதற்காகவே இறைதூதர் அவர்கள் தற்காப்புப் போரை அனுமதித்தார்கள். இந்நோக்கம் நிறைவேறியதும் அவர்கள் தம் கொடிய பகைவர்களைக்கூட மன்னித்து விட்டார்கள். அவர்களது அன்புக்குரிய பெரிய தந்தை ஹம்ஸா (ரலி) அவர்களின் உடலைச் சின்னாபின்னப்படுத்தி, அன்னாரது ஈரலையே மென்று துப்பியவர்களைக்கூட மன்னித்தார்கள்.

முஹம்மத் (ஸல்) போதித்த சர்வதேச சகோதரத்துவமும் மானுட சமத்துவக் கொள்கையும் சமுதாய மேம்பாட்டுக்கு அவர்கள் ஆற்றிய மாபெரும் பங்களிப்பாகும். பொதுவாக இதர சமயத்தவரும் இவற்றைப் போதித்துள்ளபோதிலும் நபிகள் நாயகம் அவர்களே வெறும் கொள்கையளவிலிருந்த இவற்றை நடைமுறைப்படுத்திக் காட்டினார்கள். இதனடிப்படையில் இன்றில்லாவிட்டாலும் என்றாவது உலகளாவிய ரீதியில் பரந்த அளவிலான விழிப்புணர்ச்சி ஏற்பட்டு, அதன் பயனாகச் சாதிக் கொடுமை ஒழிந்து மனித சகோதரத்துவ உணர்ச்சி மேலோங்கும்போது இறுதித்தூதர் நிலைநிறுத்திய மனித சகோதரத்துவத்தின் பெருமையும் பெறுமதியும் எத்தகையது என்பதை உலகம் உணரும்.

இஸ்லாத்தின் ஓர் அம்சமான சகோதரத்துவத்தின் சிறப்பை எடுத்து விளக்க முற்பட்ட கவிக்குயில் சரோஜினிநாயுடு பின்வருமாறு குறிப்பிடுகிறார்: ''ஜனநாயகத்தை முதலில் போதித்ததும் சாதித்ததும் இஸ்லாம்தான். நெடிதுயர்ந்த மினாராக்களிலிருந்து பாங்கொலியின் இனியநாதம் எழுந்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ததுமே அடியார்கள் பள்ளிவாசலுக்கு அணியணியாகச் செல்வர்; அங்கே அவர்களனைவரும் ஒன்றுகூடுவர்; ஆண்டியும் அரசனும் அருகருகே நின்று ''அல்லாஹ்வே மிகப் பெரியவன்'' எனப் பிரகடனஞ் செய்வர். இவ்வாறு நாள்தோறும் ஐவேளை இஸ்லாத்தின் ஜனநாயகத் தன்மை வெளிப்படுத்தப் படுகின்றது. இந்த இணைபிரியாத ஐக்கியத்தைக் கண்ணுறும் போது நான் என்னையே அறியாத ஒருவித உணர்வினால் கட்டுண்டுவிடுகிறேன். உண்மையிலேயே இஸ்லாம், மனிதர்களை இனம் புரியாததொரு சகோதர உள்ளுணர்வால் இணைத்து விடுகிறது. இரண்டு முஸ்லிம்கள் லண்டன் மாநகரில் சந்திக்க நேர்வதாக வைத்துக்கொள்ளுங்கள். அவர்களது தாய்நாடு எகிப்து, துருக்கி, இந்தியா அல்லது அல்ஜீரியாவாக இருந்தாலும் ''இஸ்லாத்தைச் சேர்ந்தோர்'' என்ற சகோதர உணர்வு ஒன்றே அங்கு மேலோங்கி நிற்கும்''

மகாத்மா காந்தி தமக்கேயுரிய தனிப் பாணியில் இவ்வாறு உரைக்கின்றார்:- ''தென்னாபிரிக்காவிலுள்ள ஐரோப்பியர் இஸ்லாத்தின் எழுச்சியைக் கண்டு அஞ்சுவதாக யாரோ கூறுகிறார். இஸ்லாம் — ஸ்பெயினை நாகரிகமடையச் செய்த இஸ்லாம்; மொராக்கோவிற்கு ஒளிவிளக்கை ஏந்திச் சென்ற இஸ்லாம்; சகோதரத்துவத்தின் சங்கநாதம் உலகெங்கணும் ஒலிக்கச் செய்த இஸ்லாம்; அந்த இஸ்லாம் எழுச்சிபெறுவதால் ஆபிரிக்கர்கள் வெள்ளையர்களோடு சம உரிமை பாராட்டுவர் என்ற காரணத்தினால் ஐரோப்பியர் அஞ்சுகின்றனர் என்றால், சகோதரபான்மையோடு பழகுவது ஒரு பாவமான காரியம் என வெள்ளையர்கள் கருதுகின்றனர் என்றால், கறுத்த இன மக்களின் சமத்துவத்திற்கு அவர்கள் அஞ்சுகின்றனர் என்றால் அவர்களின் அச்சத்தில் ஆச்சரியப்படுவதற்கு எதுவுமில்லை''

ஆண்டுதோறும் ஹஜ் யாத்திரைக் காலத்தில் மக்கமா நகரில் உலகம் ஒரு கண்கொள்ளாக் காட்சியைக் காண்கிறது. இன, நிற, மொழி வேறுபாடுகள் அறவேயற்ற உலகளாவிய பேரியக்க மாநாடாக அஃது அமைகிறது; ஐரோப்பியரும்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆபிரிக்கரும், பாரசீகரும், இந்தியரும், சீனரும் இன்னபிறரும் ஒரே தெய்விகக் குடும்பத்தின் உறுப்பினர்களாய் மட்டுமல்லாது, ஒரே விதமான உடையணிந்தவர்களாயும் காணப்படுகின்றனர்; தைக்கப்படாத சாதாரண வெள்ளைத்துணிகள் இரண்டில், ஒன்றைத் தோளைச் சுற்றியும் மற்றதை இடுப்பைச் சுற்றியும் அணிந்து கொண்டு, ஆடை அலங்கார ஆடம்பரம் எதுவுமின்றி மொட்டைத் தலையோடு அங்கு அணிதிரளும் முஸ்லிம்கள் ஒரே குரலில் ''இறைவனே, இதோ நான் வந்துவிட்டேன்; உனது ஆணைக்கு அடிபணிந்தேன்; நீ தனித்தவன், இணைதுணையற்றவன்; இதோ நான் வந்துவிட்டேன்'' என்று முழங்குகின்றனர். உயர்ந்தவர்களையும் தாழ்ந்தவர்களையும் வேறுபடுத்திக்காட்ட எதுவுமற்ற நிலையில் இஸ்லாத்தின் உலகளாவிய உணர்வுகளை உள்ளத்தில் ஆழப் பதித்தவர்களாக அங்கிருந்து தத்தமது இல்லம் ஏகுகின்றனர்.

பேராசிரியர் ஹேர்க்ரென்ஜ் கூறுகிறார்:- ''இஸ்லாத்தின் திருத்தூதர் தோற்றுவித்த பன்னாட்டுக் கூட்டமைப்பானது, உலக ஐக்கியம், மனித சகோதரத்துவம் என்பவற்றை உலகளாவிய வகையில் ஏனைய நாடுகளுக்கும் எடுத்துக்காட்டுகிறது. கூட்டமைப்பினைச் செயற்படுத்துவதற்கு இஸ்லாம் ஆற்றிய பணிக்குச் சமமாக உலகின் வேறெந்தச் சமுதாயமும் பணியாற்றியதில்லை.''

உலகிற்கு ஜனநாயகத்தை சிறந்த முறையில் அறிமுகப்படுத்தியவர் இஸ்லாத்தின் இறைதூதரேயாவர். அந்த ஜனநாயகமே இரண்டாம் கலீபா உமர் (ரலி), நபிகளாரின் மருகர் கலீபா அலி (ரலி), கலீபா மன்சூர், கலீபா மாமூனின் மகனை அப்பாஸ் ஆகியோர் உட்பட பல ஆட்சியாளர்களை ஏனைய சாதாரண குடிமக்களைப் போன்றே இஸ்லாமிய நீதி மன்றத்தின் முன் கொண்டு வந்து நிறுத்திற்று.

இன்றும் கூட, நாகரிக வெள்ளையர்கள், கறுப்பு நீக்ரோ மக்களை எவ்வாறு நடத்துகின்றனர் என்பது நாமெல்லோரும் நன்கு அறிந்ததே. பிலால்(ரலி) என்பவரின் நிலையைச் சற்றே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிந்தியுங்கள். பதினன்கு நூற்றாண்டுகளுக்கு முன்னர் நபிகளாரின் காலத்தில் வாழ்ந்த ஒரு நீக்ரோ அடிமை அவர். அந்நாளில் தொழுகைக்கு அழைப்பது மிக மேலானதொரு பணியாகக் கருதப்பட்டது. இந்தப் பணி, அடிமை பிலால் (ரலி) இடம் ஒப்படைக்கப்பட்டது. மக்கா வெற்றியின் பின்னர் நபிகள் நாயகம் (ஸல்), பாங்கு சொல்லி மக்களைத் தொழுகைக்கு அழைக்குமாறு அவரிடத்தில் வேண்டிக் கொண்டார்கள். அதன் நிமித்தம், தடித்த உதடும் கறுத்த மேனியும் கொண்ட அந்த நீக்ரோ அடிமை வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்ததும் மிகப் புனிதம் பொருந்திய திருத்தலமுமான கஃபதுல்லாஹ்வின் கூரை மீதேறி நின்ருர், இதைக் கண்ணுற்றதும் ஆணவம் பிடித்த சில அரபிகள் ஆவேசமுற்றனர். ''இந்த கறுத்த நீக்ரோ அடிமை கஃபாவின் மீதேறி நிற்பதா?'' என அவர்கள் அங்கலாய்த்தனர்.

இத்தகைய ஆணவம், தப்பெண்ணம் ஆகியவற்றுக்கு இஸ்லாத்தின் இறுதித்தூதர் முற்றுப்புள்ளி வைப்பதற்காக, அவர்கள் நிகழ்த்திய ஒரு பேருரையில் இது பற்றிப் பிரஸ்தாபித்தார்கள்:- ''அறியாமைக் காலத்தில் நிலவிய தீமைகளையும் ஆணவத்தையும் எங்களிடமிருந்து இல்லாமலாக்கியதற்கு அல்லாஹ்வுக்கு நன்றி செலுத்த வேண்டும். மக்களே! மனிதர்களில் இரு பிரிவினரே இருக்கின்றனர். ஒரு பிரிவினர் பயபக்தியும், இறையச்சமும் உள்ளவர்கள். இவர்களே அல்லாஹ்விடத்தில் கண்ணியத்துக்குரியவர்கள். மற்றவர்கள் மாறுசெய்வோரும், கல் நெஞ்சம் படைத்தோருமாவர். அவர்கள் அல்லாஹ்வின் பார்வையில் தாழ்ந்தோரும் வெறுக்கத் தக்கோரும் ஆவர். மற்றப்படி எல்லா மனிதர்களும் ஆதம் (அலை) அவர்களிலிருந்து தோன்றியவர்களே. ஆதம் (அலை) அவர்களோ மண்ணிஞல் படைக்கப்பட்டவர்கள்''

இதனையே திருக்குர்ஆனும் பின்வருமாறு உறுதிப்படுத்துகிறது:- ''மனிதர்களே! நிச்சயமாக நாம் உங்களை ஓர் ஆண், ஒரு பெண்ணிலிருந்துதான் சிருஷ்டித்தோம். பின்னர் ஒருவர் மற்றவரை அறிந்து கொள்ளும் பொருட்டு, உங்களை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிளைகளாகவும், கோத்திரங்களாகவும் ஆக்கினேம். உங்களில் எவன் மிகவும் பயபக்தியுடையவனுக இருக்கிருனே, அவன் தான் அல்லாஹ்விடத்தில் நிச்சயமாக மிக்க கண்ணியவான்.''

(திருக் குர்ஆன் 49: 13)

இறைதூதர் ஏற்படுத்திய இந்த மகத்தான மனமாற்றம், கண்ணியமான உயர் குடிப் பிறந்த அரேபியர் தமது அருமைப் புதல்வியரை அந்தக் கறுத்த நீக்ரோ அடிமைக்கு மணமுடித்துக் கொடுக்க முன்வரும் அளவுக்கு அவர்களிடையே பிரதிபலித்தது. இஸ்லாமிய வரலாற்றில் மகா உமர் (Umar the Great) என வர்ணிக்கப்படுபவரும், விசுவாசிகளின் வீரத் தளபதியுமான கலீபா உமர் (ரலி), இந்தக் கறுத்த அடிமையை காணும்தோறும் உட்கார்ந்த இடத்திலிருந்து மரியாதைக்காக உடனே எழுந்துவிடுவார்கள்! ''இதோ எங்கள் எஜமானர் வருகிருர்; இதோ எங்கள் தலைவர் வருகிருர்'' என்று மிக்க மகிழ்ச்சியோடு அவர்களை வரவேற்பார்கள்.

அக்காலத்தில் உலகிலேயே மமதை பிடித்த மக்களாகக் கருதப்பட்ட அரேபியர் மத்தியில் திருக்குர்ஆனும், திருத்தூதரும் ஏற்படுத்திய மாற்றம் எத்தகையது என்பதைப் பார்த்தீர்களா? இதனுலன்றோ ஜெர்மானிய மகாகவி கோத்தே, ''இந்நூல் (திருக்குர்ஆன்) ஒவ்வொரு காலகட்டத்திலும் வலுவான செல்வாக்குள்ளதாகத் திகழும்'' என்கிருர். இதுவே ஜோர்ஜ் பெர்னுட்ஷா ''அடுத்த நூறு வருடங்களுள் இங்கிலாந்தை, ஏன் ஐரோப்பாவையே ஒரு சமயமானது தனது ஆதிக்கத்துள் கொணருமானுல் நிச்சயமாக அஃது இஸ்லாமேயாகும்.'' என்று சொல்வதற்கும் ஒரு காரணமாகும்.

இஸ்லாத்தின் இதேபோன்ற இன்னெரு ஜனநாயக உணர்வு தான் ஆண்களின் கட்டுப்பாட்டிலிருந்து பெண்களை விடுவித்தது. சேர் சால்ஸ் எட்வேர்ட் ஆர்ச்சிபோல்ட் ஹமில்டன் கூறுகிருர்: ''ஆண்களும் பெண்களும் ஒரே மூலத்திலிருந்து வந்தவர்களே என்றும், அவர்களுக்கு உள்ளது ஒரே விதமான ஆன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாவே என்றும், அறிவு பூர்வமான, ஆன்மிக, ஒழுக்க மேம்பாட்டை அடைவதில் அவர்களுக்கு ஒரேயளவிலான ஆற்றலே அளிக்கப்பட்டுள்ளது என்றும் இஸ்லாம் போதிக்கிறது''

வாள் திறனும், தோள் வலிமையும் கொண்ட ஆண்கள் மட்டுமே சொத்துக்களின் வாரிசுகளாக ஆகலாம் என்பது அரேபியரின் பாரம்பரியக் கருத்தாகும். இதற்கு மாற்றமாக இஸ்லாம், இயல்பிலேயே பலவீனமான பெண்களுக்கு பலத்த பாதுகாப்பாக அமைந்தது. அது பெற்றோரின் சொத்தில் பங்கு பெறுவதற்கான உரிமையைப் பெண்களுக்கு அளித்தது. இற்றைக்கு எத்தனையோ நூற்றாண்டுகளுக்கு முன்பே இஸ்லாம் பெண்களுக்கு சொத்துரிமையை அளித்திருந்தது. அதற்குப் பன்னிரண்டு நூற்றாண்டுகளுக்குப் பின்னரே கி. பி. 1881 ஆம் ஆண்டில் ''ஜனநாயகத்தின் பிறப்பிடம்'' என்றழைக்கப்படும் இங்கிலாந்தில் இஸ்லாத்தின் இச்சட்டத்தின் அடிப்படையில் ''திருமணமான பெண்கள் சட்டம்'' என்ற ஒரு சட்டம் ஆக்கப்பட்டது. ''பெண்கள் ஆண்களின் மறுபாதி; பெண்ணுரிமை என்பது மிகப் புனிதமானது; பெண்களுக்கு வழங்கப்பட்டிருக்கும் உரிமைகளைக் கண்ணும் கருத்துமாகப் பேணுங்கள்'' என இஸ்லாத்தின் இறுதித்தூதர் அவர்கள் பதினான்கு நூற்றாண்டுகளுக்கு முன்பே பிரகடனஞ் செய்தனர்.

★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 3

மனிதனது நாளாந்த நடவடிக்கைகளில் அரசியலும் பொருளாதாரமும் குறிப்பிடத்தக்களவு தாக்கத்தை ஏற்படுத்துகின்றபடியால் அவை பற்றிய முக்கியமான கருத்துக்களை இஸ்லாம் தன்னகத்தே கொண்டுள்ளது. பேராசிரியர் மெஸிக்னன் என்பவர் கூறுவதைப்போல, ''அளவு கடந்த முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ள இரு எதிர்முனைகளுக்கு இடையில் இஸ்லாம் ஒரு சமநிலையைத் தோற்றுவிக்கிறது. அத்துடன் எதனைச் செய்யும்போதும் நாகரிகத்திற்கு அடிப்படையாக அமையும் ஒழுக்கப் பண்பினைக் கட்டியெழுப்புவதிலேயே கவனஞ் செலுத்துகிறது''. வாரிசுரிமைச் சட்டத்தின் வாயிலாகவும், வசதிபடைத்தோர் விருப்பத்தின் பேரில் அல்லாது கட்டாயமாகச் செலுத்தியாக வேண்டிய ஸகாத்தின் மூலமாகவும் முக்கியமாக இஃது அடையப் பெறுகிறது. அத்தோடமையாது பொருளாதாரத்துறையில் காணப்படும் சமூகத்திற்கு தீமை விளைவிக்கும் நடவடிக்கைகளான ஏகபோகம், வட்டி, உழைக்காமல் ஏற்கனவே தீர்மானித்தபடி வருமானம் பெறுதல், விலைவாசியை அதிகரிப்பதற்காக பொருள்களுக்கு செயற்கையான தட்டுப்பாட்டை உண்டாக்குதல், பதுக்கல், சூதாட்டம் என்பவற்றை இஸ்லாம் சட்ட விரோதமானவை எனத் தடை செய்துள்ளது. பாடசாலைகளுக்கும், வணக்கஸ்தலங்களுக்கும், மருத்துவமனைகளுக்கும் உதவுவதும் பொதுக் கிணறுகளை வெட்டுவதும் அனுதை நிலையங்கள் அமைப்பதும் நன்மை பயப்பன என இஸ்லாம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வலியுறுத்துகிறது. இஸ்லாத்தின் இறுதி நபியவர்களது போதனைகளின் அடிப்படையிற்ருன், அனுதை நிலையங்கள் முதன் முறையாக நிறுவப்பட்டன எனச் சொல்லப்படுகிறது. ஓர் அனுதையாகவே பிறந்த முஹம்மது (ஸல்) அவர்கள் காரணமாகவே அனுதைகளை ஆதரிக்கும் விஷயத்தில் உலகம் அக்கறை காட்டுகிறது. அவர்களைப் பற்றி கார்லைல் எழுதுகின்றபோது ''பாலைவனப் பெருவெளியில் வாழும் இவ் வியற்கை மைந்தனின் இருதயத்திலிருந்து மனித சமுதாயத்தின், பயபக்தியின், சகோதரத்துவத்தின் இயல்பான குரல் ஒலிக்கிறது. இதனுல் எல்லா நன்மைகளும் ஏற்பட்டு வருகின்றன'' எனக் கூறுகிருர்.

ஒருவரைப் பெரிய மனிதர் என மதிப்பிடுவதற்கு மூன்று முக்கிய விஷயங்களை அவதானிக்க வேண்டும் என்கிருர் ஒரு வரலாற்ருசிரியர். அவையாவன; (I) அவர் உயர் பண்புகளின் உறைவிடமாய்த் திகழ்ந்தார் என்பதை அதே காலத்தில் வாழ்ந்த ஏனையோர் ஏற்றுக் கொண்டிருக்க வேண்டும். (ii) அக்காலத்தில் பொதுவாக நிலவிய வாழ்க்கை நிலையைவிட அவரது வாழ்க்கை சிறந்து விளங்கியிருக்க வேண்டும். (ii ) பிற்காலத்தவரும் பயன்படத் தக்கவாறு அவர் இவ்வுலகில் எதையாவது நிரந்தரமாக விட்டுச் சென்றிருக்கவேண்டும்.

இவை யாவும் முஹம்மத் (ஸல்) அவர்களிடத்தில் அதி உன்னத நிலையில் காணப்பட்டன. இவற்றை விட, ஒருவரை உயர்ந்த மனிதர் என மதிப்பிடுவதற்கு இன்னும் என்னென்ன அளவுகோல்கள் உண்டோ அவை அத்தனையையும் கொண்டு அளந்தாலும் இறுதித்தூதர் அந்தப் பெருமைக்குரியவர் என்பதைப் புரிந்து கொள்வீர்கள். மேற்சொன்னவற்றுள் இறுதியாகக் குறிப்பிட்ட இரண்டு அம்சங்களும் இறைதூதரிடம் காணப்பட்ட விதத்தை ஏற்கனவே குறிப்பிட்டுள்ளோம்.

இம் மூன்று அம்சங்களிலும் முதன்மையானது, ஒருவர் உயர் பண்புகளின் உறைவிடமாய்த் திகழ்ந்தார் என்பதை சமகாலத்தவர் எவ்வளவு தூரம் ஏற்றுக்கொண்டனர் என்பதாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறைதூதரிடத்தில் காணப்பட்ட பொற்குணங்களை குறிப்பாக, கறைபடியாத நேர்மை, கலப்பற்ற நாணயம், நிகரற்ற நன்னடத்தை, உண்மையான உளப்பான்மை என்பவற்றை முஹம்மத் (ஸல்) அவர்களோடு அன்னியோன்யமாகவும் நெருக்கமாகவும் பழகிய தோழர்கள் மட்டுமன்றி பகைவர்களும் ஏற்றுக்கொள்கிறார்கள். அவர்களது வாழ்வின் ஒவ்வொரு நிலையிலும் வாழ்க்கையின் ஒவ்வொரு துறையிலும் இவற்றை அவதானிக்க முடிந்திருக்கிறது.

அவர்கள் பாரபட்சம் காட்டாதவர் என்பதால் யூதர்களும், இஸ்லாத்தை ஏற்றுக்கொள்ளாத ஏனையோரும் தமக்குள் ஏற்படும் பிணக்குகளைத் தீர்த்துக்கொள்ள அன்னாரை நடுவராக ஏற்றுக்கொண்டனர்- அவர்களது தூதை ஒப்புக்கொள்ளாதவர்கள் ''முஹம்மதே, நாம் ஒருபோதும் உங்களைப் பொய்யர் எனச் சொல்லவில்லை. ஆனால் உங்களுக்கு வேதத்தை அருளி, உங்களைத் தூதராகவும் அனுப்பிய இறைவனையே நாங்கள் ஏற்றுக்கொள்ள மறுக்கிறோம்'' என்றனர். அன்னார் ஏதோ மனநோயினால் பாதிக்கப்பட்டிருக்கலாம் என அம்மக்கள் நினைத்தனர். அதனைக் குணப்படுத்துவதற்காக வன்முறையைக் கையாண்டனர். ஆனால், அவர்களிடத்திலிருந்து ஒரு புத்தொளி புறப்படுவதாகவும், அவ்வறிவொளி மூலம் தங்களுக்குத் தெளிவு பிறக்கப் போவதாகவும் அவர்களில் சிறந்தவர்கள் சிந்தித்தனர். நெருங்கிய உறவினர்களும், நண்பர்களும் அவர்களது தூது தெய்விகமானது என்பதை சந்தேகத்திற்கு இடமின்றி ஏற்றுக்கொண்டனர். இறைதூதரது வரலாற்றில் இஃது ஒரு சிறப்பம்சமாகும்,

இறைதூதரின் தனிப்பட்ட வாழ்க்கையின் ஒவ்வோர் அம்சத்தையும் நன்கறிந்த இந்த ஆண்களும் பெண்களும் கண்ணியமானவர்கள்; விவேகமுள்ளவர்கள்; கற்றறிந்தவர்கள். அவர்கள், முஹம்மத் (ஸல்) அவர்களிடத்தில் ஏமாற்றுக்காரருக்குரிய ஏதாவதோர் அறிகுறியையோ, மோசடியையோ, வீணான காரியங்களையோ கண்டு அவர்கள் மீது நம்பிக்கையிழந்திருந்தால், அதன் விளைவாக நபிகளார் உருவாக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிக் கொண்டிருந்த ஒழுக்க மாண்புகள் மீதான நம்பிக்கை, ஆன்மிக விழிப்புணர்ச்சி, சமூக சீர்திருத்த மனோபாவம் அத்தனையும் கணப்பொழுதில் சுக்குநூறுகச் சிதறிப்போயிருக்கலாம். ஆனல் நிலைமையோ இதற்கு நேர்மாற்றமாயிருந்தது, அவர்களைப் பின்பற்றியோர் அன்னாரின் மீது அளவு கடந்து அன்பு செலுத்தினர்; உயிருக்குயிராக அவர்களை நேசித்தனர்; தாமாகவே முன்வந்து அவர்களைத் தங்களது தலைவராக ஏற்றுக்கொண்டனர்; அவர்களது உயிருக்கு ஆபத்து நேரலாம் என்ற அச்சம் நிலவிய போதெல்லாம் அரணுக நின்று அவர்களைப் பாதுகாத்திருக்கின்றனர்; அவர்களைப் பின்பற்றிய ஒரே காரணத்திற்காக எதிரிகளின் எண்ணற்ற சித்திரவதைகளுக்குள்ளாகி, சிறுகச் சிறுகக் கொல்லப்பட்டு, சாவின் விளிம்பிலே ஊசலாடியபோதும் — ஏன் உயிரையே துறந்தபோதும் இறைதூதர் மீது கொண்ட பற்றுறுதியை அவர்கள் சற்றேனும் தளரவிடவில்லை. தங்களது தலைவரிடத்தில் ஏதாவது தவறைக் காண நேர்ந்திருந்தால் இந்தளவு திடவுறுதி அவர்களிடம் இருந்திருக்க முடியுமா?

ஆரம்பகாலத்தில் இஸ்லாத்தைத் தழுவியோரின் வரலாற்றைப் படித்துப் பாருங்கள். அவர்களுக்கு இழைக்கப்பட்ட கொடுமைகளை நினைக்கும் போது நெஞ்சம் நெகிழ்ந்துருகும். சுமையா (ரலி) என்ற அப்பாவிப் பெண்மணியின் உடலில் அம்புகள் ஊடுருவிச் செல்கின்றன. யாஸிர் (ரலி) என்பவரின் கால்களிரண்டும் வெவ்வேறு ஒட்டகங்களில் கட்டப்பட்டு, இரு வேறு திசைகளில் அவை ஓட்டிச் செல்லப்படுகின்றன. அனலாக எரியும் நிலக்கரியைப் படுக்கை போன்று பரப்பி அதன் மேல் கப்பாப் பின் அர்த் (ரலி) கிடத்தப்படுகிறார். போதாக்குறைக்கு ஒரு மனித மிருகம் அவரது மார்பில் ஏறி மிதித்து, நின்று நகரவிடாமல் செய்கிறது. இதனல் அவரது தோலின் கீழுள்ள கொழுப்பு கூட உருகி வழிகிறது. கப்பாப் பின் அதீ (ரலி) கொல்லப்பட்ட விதமும் மிகக் குரூரமானது. துடிக்கத் துடிக்க துண்டம் துண்டமாக அவரது தசை வெட்டியெடுக்கப்படுகிறது, இவ்வாறு வதைக்கும்போது, அவருக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதில் அவரது தலைவர் இத்தகைய துன்பத்திற்கு இலக்கா வதை அவர் விரும்பினுல் வீடு திரும்பி மனைவி மக்களோடு மகிழ்ந்திருக்கலாம் எனக் கூறப்படுகிறது. அதற்கு அவர், தன்னைப் போன்றே தனது மனைவி மக்களையும் இதே நிலைக்கு உட்படுத்தினுலும் மகிழ்ச்சியோடு ஏற்றுக்கொள்வாரேயன்றி நாயகத்தின் மேனியில் ஒரு சிறு முள் தைப்பதைக்கூட தன்னுல் சகித்துக்கொள்ளமுடியாது என்று உணர்ச்சி பொங்கக் கூறிவிடுகிருர். இதயத்தைப் பிழியும் இத்தகைய சம்பவங்கள் எத்தனையோ இஸ்லாமிய வரலாற்றில் இடம்பெற்றுள்ளன. ஏன் இந்த இஸ்லாமியப் பெருந்தகைகள் — ஆண்களும் பெண்களும்— இறைதூதரிடத்தில் மனப்பூர்வமாக விசுவாசங் கொண்டு தம் உள்ளத்தையும் உயிரையும் உடலையும் அன்புப் பரிசாக அளிக்கவும் துணிந்தனர்? முஹம்மது நபியவர்களை உடனடியாக ஏற்றுப் பின்தொடர்ந்தோர் வெளிப்படுத்திய ஆழமான நம்பிக்கையும், தளராத உறுதியும், நபியவர்களின் உண்மை உளப்பான்மைக்கும் ஊக்கங்குன்ரு இலட்சியப் பணி யாக்கத்திற்கும் உன்னதச் சான்ருகத் திகழ்கின்றதல்லவா?

மேலே சொன்ன மனிதர்கள் தாழ்ந்த நிலையில் இருந்தவர்களோ மனப்பக்குவத்தை அடையாதாரோ அல்லர். மக்காவில் முஹம்மத் (ஸல்) அவர்களைச் சுற்றி ஆரம்ப நாட்களில் சூழ்ந்திருந்த மக்கள் அந்தஸ்திலும், செல்வத்திலும், நடத்தையிலும் சிறந்து விளங்கியவர்கள் என்பதையும், இறைதூதரின் அகத்தையும் புறத்தையும் நன்கு அறிந்திருந்த உற்ருர் உறவினர்கள் என்பதையும் நாம் மறக்கலாகாது. ஒழுக்கப் பண்பில் சிறந்து விளங்கிய இஸ்லாத்தின் நாற்பெரும் கலீபாக்கள்கூட ஆரம்ப காலத்தில் இஸ்லாத்தைத் தழுவியோரே என்பதையும் நாம் மனதில் இருத்திக் கொள்ள வேண்டும்.

பிரித்தானிய கலைக்களஞ்சியம் (Encyclopaedia Britannica) முஹம்மத் (ஸல்) அவர்களை இறைதூதர்களிலும், மத போதகர்களிலும் மாபெரும் வெற்றியாளராகத் திகழ்வதாகப் புகழாரம் சூடியிருக்கிறது. ஆனுல், இந்த வெற்றி காற்றடித்த திசையில் தற்செயலாக அள்ளுண்டு வந்ததொன்றல்ல. இஃது இறைதூதரிடம் காணப்பட்ட சிறப்புக்களை அவர்களது காலத்தில் வாழ்ந்தோர் கண்ணெதிரே கண்டு, மனப்பூர்வமாக ஏற்றுக்கொண்டதால் கிடைத்த வெற்றியேயாகும். அவர்களது அரிய, அருமையான, அனைவரையும் ஈர்க்கின்ற ஆளுமை என்ற தன்னிகரற்ற தனித்தன்மைக்குக் கிடைத்த வெகுமதியே இந்த வெற்றி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 4

இறைதூதர் முஹம்மத் (ஸல்) அவர்களின் ஆளுமை அல்லது தனித்தன்மை பற்றிய உண்மையினை முழுமையாக அறிவதென்பது சாத்தியமானதல்ல அதன் ஒரு துளியையே நான் காண முடிகிறது. அன்னாரது வாழ்க்கையை எண்ணிப் பார்க்கையில் அடுத்தடுத்து மனத்திரையில் தோன்றும் வியக்கத்தக்க காட்சிகள்தான் எத்தனை?—எத்தனை முஹம்மத்? இறைதூதரான முஹம்மத் (ஸல்); அறப்போர்த் தளபதி முஹம்மத் (ஸல்); ஆட்சியாளர் முஹம்மத் (ஸல்); நீதியின் நிலைக்களன் முஹம்மத் (ஸல்); சிறந்த தத்துவஞானி முஹம்மத் (ஸல்); சன்மார்க்கப் போதகர் முஹம்மத் (ஸல்); சீர்திருத்தச் செம்மல் முஹம்மத் (ஸல்); மதியூகமிக்க இராஜதந்திரி முஹம்மத் (ஸல்); நேர்மையான வர்த்தகர் முஹம்மத் (ஸல்); அனாதைகளின் ஆதரவாளர் முஹம்மத் (ஸல்); அடிமைகளின் விடுதலை வீரர் முஹம்மத் (ஸல்); பெண்களின் பாதுகாவலர் முஹம்மத் (ஸல்); நடுநிலை வழுவா நீதிபதி முஹம்மத் (ஸல்); ஆத்மஞானி முஹம்மத் (ஸல்)—இவ்வாறு மனித வாழ்வின் பல்வேறு துறைகளிலும் பாத்திரங்களிலும் தன்னிகரற்ற தனிப்பெருந் தலைவராகத் திகழ்ந்தவர் முஹம்மத் (ஸல்) அவர்கள்.

அனாதை நிலை என்பது ஆதரவற்ற நிலையின் எல்லை. அவ்வெல்லையில் ஆரம்பித்த அண்ணலார் அவர்களின் உலக வாழ்க்கை, உலக அதிகாரத்தின் உச்சமான ஆட்சியாளர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ற உயர்நிலையில் நிறைவுற்றது, அனாதைச் சிறுவனாகப் பிறந்து, துன்புறுத்தப்பட்ட அகதியாகி, தன் நாடு முழுவதற்கும் ஆன்மிக, உலகாயதத் தலைவனாகி, அந்நாட்டின் தலைவிதியையே நிர்ணயிக்கும் தனிப்பெரு நிலைக்கு உயர்ந்து, சோதனைக்கு மேல் சோதனைகள், மாற்றங்கள், ஒளிகள், இருள்கள், ஏற்றத்தாழ்வுகள், பயங்கர நிலைகள், சீர்சிறப்புக்கள் அனைத்தையும் அனுபவத்தில் கண்டு, அவற்றில் எதனாலும் பாதிக்கப்படாமல் வாழ்க்கைப் போராட்டத்தில் நிகரிலா வெற்றியீட்டி, வாழ்க்கைத் துறை ஒவ்வொன்றிற்கும் ஓர் அழகிய முன்மாதிரியாகி— ஒரு கலங்கரை விளக்கமாகப் பேரொளி வீசிய பெருந்தகை நபிமணி முஹம்மத் (ஸல்) அவர்கள். அன்னாரது சாதனைகள் வாழ்க்கையின் குறித்த ஒருதுறையை மட்டும் சார்ந்தவையல்ல; மனித வாழ்வின் எல்லாத் துறைகளையும் உள்ளடக்கியவை.

எடுத்துக்காட்டாக, ஒழுக்கக் கேட்டிலும் காட்டுமிராண்டித்தனத்திலும் உழன்ற மக்களை நல்வழிப்படுத்தி, நாட்டைத் தூய்மைப்படுத்துவதில்தான் ஒருவரது உயர்வு தங்கியிருக்கிறது என்றால், அந்தச் செயல்வீரர் அத்தகைய மக்களின் வாழ்க்கை முறையை முற்றுமுழுதாக மாற்றியமைத்து, அவர்கள் வாழ்ந்த நாட்டை புனிதமும், மேன்மையும் மிக்கதாக ஆக்கினார்கள், அவர்கள் உருவாக்கிய சமூகத்தின் உறுப்பினர்கள்தாம் நாகரிகத்தையும் அறிவு ஞானத்தையும் ஏனையோருக்கும் எத்திவைத்தவர்கள், எனவே உயர்ந்தவர் என்ற அந்தஸ்து முஹம்மத் (ஸல்) அவர்களுக்கு உரித்தாகிறது. வேறுபட்டு நின்றவர்களையெல்லாம் ஒற்றுமைப்படுத்தி அவர்களுக்கு சகோதர உணர்வையூட்டுவதிலேயே ஒருவரது உயர்வு இருக்கிறது என்றால், பாலைவனவாசியான அந்த இறைதூதருக்கு அதற்கான அத்தனை தகுதிகளும் உண்டு. மூட நம்பிக்கைகளையும் தீய பழக்க வழக்கங்களையும் ஒழித்துக் கட்டுவதில்தான் உயர்வுண்டு என்றால், கோடானுகோடி மக்களின் உள்ளங்களில் குடியிருந்த குருட்டு நம்பிக்கைகளையும், அறிவுக்குப் பொருந்தாத வீணான அச்சத்தையும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துடைத்தெறிந்தவர் என்ற பெருமை அவர்களையே சாரும். சிறந்த குணவொழுக்கங்களில்தான் மாண்பும் மரியாதையும் தங்கியுள்ளதென்றால், முஹம்மத் (ஸல்) அவர்கள் நம்பிக்கைக்குரியவர் (அல்—அமீன்) என்றும் உண்மையாளர் (அஸ்-ஸாதிக்) என்றும் நண்பர்களாலும் பகைவர்களாலும் கண்ணியமாக அழைக்கப்பட்டதன் மூலம் அவ்வுண்மை நிரூபிக்கப்பட்டுள்ளது. படையெடுத்துச் சென்று நாடுகளை வெல்பவரே உயர்ந்தவர் என்றால், இதோ இருக்கிறார்கள் அனாதையாய் இருந்து பின்னர் அரேபியாவின் ஆட்சியாளராக ஆனவர். கொஸ்ரோக்களையும் சீஸர்களையும் நிகர்த்த மாவீரர் இவர்தான். அவர்கள் நிறுவிய இஸ்லாமியப் பேரரசு பதினான்கு நூற்றாண்டுகளாக இன்னமும் நிலைத்து நிற்கின்றது. தலைவர் ஒருவரைப் பின்பற்றுவோர் அவர்மீது கொண்டுள்ள ஆழ்ந்த பற்றுத்தான் அவரது பெருமையை எடுத்துக் காட்டும் உரைகல் என்றால், உலகின் ஒவ்வொரு மூலைமுடுக்கிலும் வாழும் கோடிக்கணக்கான உள்ளங்களில் நபி (ஸல்) அவர்களைப் பற்றிய நினைவு நீங்காது நிறைந்திருக்கிறதே அதுவே அவர்களது உயர்வுக்குச் சான்றாகும்.

முஹம்மத் (ஸல்) அவர்கள் ஏதென்சுக்கு ரோமாபுரிக்கு, பாரசீகத்திற்கு, இந்தியாவிற்கு அல்லது சீனாவுக்குச் சென்று தத்துவஞானம் படித்தவர்கள் அல்லர். அப்படியிருந்தும் அவர்கள் மனித குலத்திற்கு அழியாத்தன்மை வாய்ந்த பேருண்மைகளை எடுத்தியம்பினார்கள். அவர்கள் எழுத்தறிவற்றவர்களாயிருந்தும் அவர்களது நாவன்மை கேட்போரின் உள்ளங்களை உவகையால் நிரப்பவும், கண்களில் நீர் ததும்பச் செய்யவும் வல்லதாகத் திகழ்ந்தது. அனாதையாகப் பிறந்து, ஏழையாகவே வளர்ந்த போதிலும் எல்லோருமே அவர்களை நேசித்தனர். அவர்கள் இராணுவப் பயிற்சிக் கூடத்தில் யுத்தப் பயிற்சி பெற்றவர்கள் அல்லர். அப்படியிருந்தும் பிரமாண்டமான சேனைகளுக்கு எதிராகப் படை நடத்திச் சென்று, இறை நம்பிக்கையையும் மனவலிமையையுமே துணையாகக் கொண்டு வெற்றிக்கு மேல் வெற்றிகளை அவர்கள் ஈட்டினார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமய போதனையில் வல்ல மேதைகள் அரிதாகவே உலகில் தோன்றுகின்றனர். உலகிலேயே மிகவும் அரியவர்கள் எனக் கொள்ளப்படுபவர்களில் திறமை மிக்க சமய போதகர்களையும் சேர்த்தார் தெஸ்கிரேட்ஸ். இதே கருத்துப்பட ஹிட்லர் ''மேயின் காம்ப்'' என்ற நூலில் குறிப்பிடுவதைக் கவனியுங்கள்: ''ஒரு பெரிய தத்துவ வித்தகர் சிறந்த தலைவராகவும் திகழ்வது அரிது அவரை விட ஒரு அரசியல் கிளர்ச்சிக்காரனுக்கு இந்தத் தகைமைகள் வாய்த்திருப்பதில் ஆச்சரியமில்லை. அத்தகையவன் எப்பொழுதும் ஒரு சிறந்த தலைவனாக விளங்குவான். தலைமைத்துவதத்திற்குத் தகுதி பெற்றிருப்போருக்கு மாபெரும் மக்கள் கூட்டத்தின் உள்ளத்தைத் தொடும் ஆற்றல் வேண்டும். தலைமைத்துவத்திற்கும் கருத்துக்களை உருவாக்கும் திறமைக்கும் பொதுவானது ஏதுமில்லை. ஆனால் ஒரு தத்துவவாதி, நிர்வாகி, தலைவன் ஆகியோரிடம் இருக்க வேண்டிய பண்புகள் அனைத்தும் ஒரு தனி மனிதரிடம் காணப்படுவது இவ்வுலகிலேயே மிகவும் அபூர்வமானது. அதில்தான் ஒருவரது மேன்மை தங்கியிருக்கிறது.'' இஸ்லாத்தின் இறுதித்தூதரான முஹம்மத் (ஸல்) அவர்களிடத்தில் உலகிலேயே அரிய இப்பண்புகள் அனைத்தும் ஒருங்கே அமையப்பெற்றிருந்தன.

பொஸ்வேர்த் ஸ்மித் பாதிரியார் சொல்வது இதைவிட வியப்பூட்டுவது: அவர் கூறுகிறார்; ''நபிகள் நாயகம் ஒரு நாட்டின் தலைவரும் ஒரு சமயத்தின் தலைவரும் ஆவர். அவர்களில் சீஸரையும் பாப்பரசரையும் ஏக காலத்தில் காணலாம். அவர்கள் போப்புக்குரிய உரிமைப்பாத்தியதைகள் எவையுமின்றியே போப்பாகவும் நிரந்தரப் படைகளோ, மெய்காப்பாளரோ, மாளிகையோ, நிரந்தர வருவாயோ இன்றியே சீஸரின் அந்தஸ்திலும் இருந்தார்கள். சரியான தெய்விக உரிமையினால் ஆட்சி செய்ததாகக் கூறிக் கொள்ள யாருக்காவது உரிமையுண்டென்றால் நிச்சயமாக அவ்வுரிமை முஹம்மது நபிக்கேயுண்டு. ஏனெனில் அதிகாரம் பெறுவதற்கு அவசியமான அமைப்புகள் எவையுமின்றியே அனைத்து அதிகாரமும் அவர் பெற்றிருந்தார். அவர்கள் அதிகாரத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தின் அணிகலன்களில் அக்கறை கொள்ளவில்லை. அவர்களது தனிப்பட்ட வாழ்க்கையில் காணப்பட்ட அதே எளிமை அவர்களது பொது வாழ்விலும் காணப்பட்டது.''

மக்கா வீழ்ச்சியுற்றபோது பத்து லட்சம் சதுர மைல் கொண்ட நிலப்பரப்பு முஹம்மத் (ஸல்) அவர்களின் காலடியில் கிடந்தது. அப்படியிருந்தும் தங்களது அறுந்த செருப்புகளையும், கிழிந்த தடித்த கம்பளி ஆடைகளையும் தாமே செப்பனிட்டுக் கொண்டார்கள். ஆடு மேய்த்தார்கள்; பால் கறந்தார்கள்; வீடு பெருக்கினுர்கள்; விறகு பொறுக்கினுர்கள். தம் குடும்பப் பணிகளைத் தம் கரங்களாலேயே செய்தார்கள். அவர்கள் வசித்த மதீனு நகரம் அன்னரது வாழ்நாளின் இறுதிப்பகுதியில் செல்வச் செழிப்புடன் விளங்கிற்று. எங்கு பார்த்தாலும் பொன்னும் வெள்ளியும் குவிந்திருந்தன. அந்த சுபீட்சமான நாட்களில் கூட அரேபிய சாம்ராச்சியத்தின் முடிசூடா மன்னரின் இல்லத்தில் பல நாட்களாக அடுப்பு எரியாதிருக்கும். சில பேரீச்சம் பழங்களும் ஒரு குவளைத் தண்ணீருமே உட்கொண்டு அவர்கள் தம் பசி தீர்த்துக் கொள்வார்கள். அவர்களது குடும்பத்தார் பல நாட்களைப் பட்டினியிலேயே கடத்துவர். அவர்கள் உறங்கியது பஞ்சணை மெத்தையில் அல்ல; ஈச்சம் பாயே அவர்களது படுக்கை. அவர்கள் இரவில் நெடுநேரம் இறைவணக்கத்தில் ஈடுபடுவார்கள். ஆகையால் அவர்கள் நீண்ட நேரம் உறங்கியதில்லை. அப்போது தங்களது கடமைகளைச் சரிவர நிறைவேற்றப் போதிய சக்தியைத் தந்தருளுமாறு அவர்கள் கண்ணீர் மல்க இறைவனைப் பிரார்த்திப்பார்கள். அப்பொழுது அடுப்பிலிட்ட பால்பானை பொங்குவதைப் போல கண்கள் பணிக்க, அவர்களது குரல் கரகரத்துவிடும்.

அவர்கள் இவ்வுலகைப் பிரியும்போது சொத்தாக விட்டுச் சென்றது சில சில்லரைக் காசுகளைத்தான். அதில் ஒரு பகுதியைக் கொண்டு அவர்கள் பட்டிருந்த கடனென்று அடைக்கப்பட்டது. எஞ்சியிருந்தது வீட்டுக்கு வந்த ஓர் ஏழைக்கு தர்மமாக வழங்கப்பட்டது அவர்கள் உயிர் நீத்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போது அணிந்திருந்த உடையில் நிறைய ஒட்டுக்கள் போடப் பட்டிருந்தன. விளக்கெரிக்க வீட்டில் எண்ணெய் இல்லை. ஆதலால் உலகிற்கே ஒளிபரப்பிய அவர்களது இல்லம் அன் றிரவு இருளில் மூழ்கியிருந்தது.

நிலைமைகள் மாறின. ஆனால் இறைதூதர் முஹம்மத் (ஸல்) அவர்கள் மாறவில்லை. வெற்றியிலும் தோல்வியிலும், இன்பத்திலும் துன்பத்திலும், செல்வத்திலும் ஏழ்மையிலும் அவர்கள் ஒரே பண்பின் உருவாகவே காட்சியளித்தார்கள். எவ்வாறு இறைவனின் நியதிகளிலும், சட்டங்களிலும் மாற் றங்கள் இல்லையோ அவ்வாறே இறைதூதர்களிலும் மாற் றங்கள் இரா.

*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 5

"நேர்மையான மனிதனே இறைவனின் உத்தமமான படைப்பு" என்பது முதுமொழி. முஹம்மத் (ஸல்) அவர்கள் நேர்மையாளராக மட்டும் விளங்கவில்லை. அன்னாரது என்பும் மனிதாபிமானத்தில் தோய்ந்திருந்தது. அன்பு, அனுதாபம் எனும் மனிதப் பண்புகள் நபிமணியவர்களது ஆன்மாவின் இன்னிசையாக இலங்கின. மனிதனைத் தூய்மையாக்கி, மேன்மைப்படுத்தி, அறிவூட்டி, மனிதனை மனிதனாக வாழ வைப்பதே அவர்களது தூதின் நோக்கம்—அவர்களது வாழ்வின் ஒரே இலட்சியம்! அவர்களது சிந்தனை, சொல், செயல் யாவும் மனித சமுதாயத்தின் நலனையே மையமாகக் கொண்டிருந்தன.

தயாள குணம் படைத்த அவர்களிடம் தன்னலம் பேணும் தன்மை எள்ளளவும் இருந்ததில்லை. இரண்டே யிரண்டு பட்டங்களே அவர்களுக்கிருந்தன. ஒன்று அல்லாஹ்வின் அடியார் மற்றது அவனது திருத்தூதர். முஹம்மத் (ஸல்) அவர்களுக்கு முன்னரும் உலகின் எல்லாப் பாகங்களிலும் இறைதூதர்கள் தோன்றி மக்களை நேர்வழியின்பால் அழைத்திருக்கின்றனர். இவர்களில் சிலரை நாம் அறிவோம்; பலரை அறியோம், இவ்வுண்மைகளை ஏற்றுக்கொள்ளாத எவரும் முஸ்லிமாக இருக்கும் தகுதியை இழந்துவிடுகிறார். ஏனெனில் இதுவும் ஒரு முஸ்லிமுக்கு இருக்க வேண்டிய நம்பிக்கையில் ஓர் அங்கமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு மேலைத்தேச எழுத்தாளர் கூறுகிறார்: ''அக்காலத்தில் நிலவிய சூழ்நிலை, இறைதூதர் மீது அன்னாரை ஏற்றுக் கொண்டோருக்கு இருந்த அளவு கடந்த அன்பு என்ற இரண்டு அம்சங்களையும் கவனத்திற்கொண்டு பார்க்கையில், அற்புதங்களை நிகழ்த்தும் சக்தி தமக்கு உண்டு எனக் கோராததே அவர்கள்நிகழ்த்திய பேரற்புதம்'' அற்புதங்கள் நிகழ்த்தப்பட்டன. ஆனால் சமயக் கொள்கையைப் பரப்புவதற்கு அவை ஆயுதமாகக் கொள்ளப்படவில்லை; இறைவனின் ஆற்றலினால் நிகழ்பவையாகவே கொள்ளப்பட்டன. தாமும் ஏனையோரைப் போன்று ஒரு சாதாரண மனிதரே என முஹம்மத்(ஸல்)அடிக்கடி கூறுவார்கள், அவர்களுக்கு வானத்திலோ பூமியிலோ பொக்கிஷம் எதுவும் இருக்கவில்லை. எதிர்காலத்தைப் பற்றி முன்னறிவிக்க தமக்குச் சக்தியுண்டு என்றும் அவர்கள் கூறவில்லை. சாதாரண துறவி ஒருவரின் சுண்டு விரல் அசைந்தாலே அற்புதங்கள் நிகழும் எனக் கருதப்பட்ட ஒரு கால கட்டத்தில், அரேபியாவிலும் பிறநாடுகளிலும் மூடநம்பிக்கைகள் பெருகி வழிந்த ஒரு காலகட்டத்தில்தான் இவை அனைத்தும் நிகழ்ந்தன.

இயற்கையையும் அதன் நியதிகளையும் பற்றி நன்கு சிந்தித்து, அதன் மூலம் இறைவனின் பேராற்றலைப் புரிந்து கொள்ளுமாறு அவர்கள் தங்களைப் பின்பற்றியோரிடம் கேட்டுக் கொண்டார்கள். ''இறைவன், வானங்களையும் பூமியையும் அவற்றுக்கிடையே உள்ளவற்றையும் வீண் விளையாட்டுக்காகப் படைக்கவில்லை. உண்மையைக் கொண்டேயன்றி அவன் அவற்றைப் படைக்கவில்லை. அவ்வாறிருந்தும் மனிதர்களில் அநேகர் இதனை அறிந்துகொள்வதில்லை'' என்று அருள்மறை குர்ஆன் இதனை அழகாக விளக்குகிறது.

இவ்வுலகமானது வெறும் மாயை அல்லது எந்நோக்கமும் அற்றது என எண்ணிவிடாதீர்கள். அஃது உண்மையைக் கொண்டே உண்டாக்கப்பட்டுள்ளது. ஏராளமான திருக்குர்ஆன் வசனங்கள் இயற்கையை நுட்பமாக அவதானிக்கும்படி அழைப்பு விடுக்கின்றன. திருக்குர்ஆனில் தொழுகை,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நோன்பு, புனித ஹஜ் யாத்திரை போன்ற கடமைகளைக் குறிப்பிடும் வசனங்களின் மொத்த எண்ணிக்கையைவிட இயற்கையமைப்பைப் பற்றி ஆராயும்படி வலியுறுத்தும் வசனங்களே அதிகம் காணப்படுகின்றன. திருமறையின் வழிகாட்டலின் மீதே முஸ்லிம்கள் இயற்கையைக் கூர்ந்து நோக்கமுற்பட்டனர். இதுவே விஞ்ஞானபூர்வமான அவதானத்திற்கும் பரிசோதனைகளுக்கும் ஊற்ருய் அமைந்தது. கிரேக்கர்கள் இவற்றை அறிந்திருக்கவில்லை. முஸ்லிம் தாவரவியல் மேதை இப்னு பைத்தர் என்பவர் உலகெங்குமுள்ள தாவர இனங்களைச் சேகரித்து, பின்னர் தாவரவியல் நூலொன்றை எழுதிமுடித்தார். மெயர் என்பார் தனது ''கெஷாடா பொடனிக்கா'' என்னும் நூலில் இவரை ''அயரா உழைப்பின் சின்னம்'' என வர்ணித்துள்ளார். இவ்வாறே அல்-பிரூனி என்ற முஸ்லிம் மேதை அரிதான கனிப் பொருள்களைத்தேடிக் கண்டுபிடிப்பதற்காக நாற்பதாண்டு காலம் நாடுநாடாக அலைந்து திரிந்தார். பிரபஞ்சத்தைப் பற்றிய சில உண்மைகளை அறிவதற்காக தொடர்ச்சியாகப் பன்னிரண்டு ஆண்டுகள் அண்டவெளியை உற்றுநோக்கிய வண்ணமேயிருந்த முஸ்லிம் வானவியலறிஞர்களையும் வரலாறு நமக்குக் காண்பிக்கிறது. அரிஸ்டோட்டல் ஒரு பரிசோதனையைக்கூட மேற்கொள்ளாது பௌதிகவியல் பற்றி எழுதினுர். மிருகங்களை விட மனிதனுக்குப் பற்கள் அதிகம் என்பது போன்ற தெட்டத்தெளிவான உண்மைகளைக்கூட உறுதிப்படுத்திக் கொள்ளச் சிரமப்படாமல் இயற்கை வரலாறு பற்றி அவர் கவனயீனமாக எழுதினுர்.

பகுப்பாய்வு உடற்கூற்றியலில் (Classical anatomy) தலைசிறந்தவர் எனக் கருதப்பட்ட கேலன் என்பவர், கீழ்த்தாடை இரண்டு எலும்புகளால் ஆனது என்று எழுதிவைத்ததை, நூற்ருண்டு காலமாக ஏனையோர் கண்மூடித்தனமாய் ஏற்றுக் கொண்டிருந்தனர். அப்துல் லதீப் என்பவர் மனித எலும்புக் கூடுகளை ஆராய்ந்து கேலன் உடைய கருத்து தவருனது என்பதை நிரூபித்தார். இத்தகைய எத்தனையோ சம்பவங்களை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனதில் கொண்டுதான் ''மனித இனத்தின் ஆக்கம்'' (The making of humanity) என்ற நூலில் றொபேர்ட் பிரிபோல்டு என்பவர் பின்வருமாறு எழுதுகிறார்:- ''அரேபியரின் கண்டுபிடிப்புகளுக்கும் புரட்சிகரமான அறிவியல் கருத்துக் களுக்கும் மட்டும் (நவீன) விஞ்ஞானம் அவர்களுக்கு நன்றி செலுத்தினால் போதாது. அரேபிய பண்பாட்டிலிருந்து விஞ்ஞானத்தைப் பிரித்தெடுக்க முடியாது. நவீன விஞ்ஞானம் பிறந்ததும், வளர்ந்ததும், உயிர் வாழ்வதும் அரேபிய பண்பாட்டிலேயேயாகும். கிரேக்கர்கள் அதனை வகைப்படுத்தி, நெறிப்படுத்தி, உருப்படுத்தினார்கள் என்பது உண்மைதான். ஆனால் அமைதியான அவதானம், அறிவைத் தேடுவதில் ஆர்வம், ஆராய்ச்சி, பரிசோதனை, அளவீடு என்பவற்றில் கையாளப்பட்ட புதுவழிவகைகள், கணிதத்தில் கிரேக்கர்கள் அறிந்திராத அணுகுமுறை என்பவற்றால் உலகிற்கு விஞ்ஞானத்தை உரிய முறையில் அறிமுகப்படுத்திய பெருமை அரேபியர்களையே சாரும்''

★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 6

விஞ்ஞானபூர்வமாக மக்கள் சிந்திப்பதற்குத் தூண்டு கோலாய் அமைந்த முஹம்மத் (ஸல்) அவர்களின் அறப்போத னைகளே, அம் மக்களது நாளாந்த வாழ்க்கை நடவடிக்கை களுக்கும் உழைப்புக்கும் புனிதத்தன்மையை அளித்தன. இறைவன் தன்னை வணக்குவதற்காகவே மனிதனைப் படைத் ததாக திருக்குர்ஆன் குறிப்பிடுகிறது. இஸ்லாமியக் கண் ணோட்டத்தில் இறைவணக்கம் என்பது ஒரு சில வணக்க வழிபாடுகளோடு நின்றுவிடுவதில்லை. இறைவனது திருப்தி யைப் பெறுவதையே முழுமுதல் நோக்கமாகக் கொண்டு மனித சமுதாயத்தின் நன்மைக்காகப் புரியும் பயனுள்ள பணிகள் அனைத்தையும் இறைவணக்கமாகவே இஸ்லாம் கருதுகிறது. இதற்கு எண்ணத் தூய்மை, நீதி என்பன இன்றியமையாதவை. சமயக் கிரியைகள் தூய்மையானவை, வாழ்க்கை அலுவல்கள் தூய்மையற்றவை — மதம் வேறு, நாளாந்த வாழ்க்கை வேறு — என்ற கருத்தை இஸ்லாம் ஒழித்து விட்டது. அனுமதிக்கப்பட்ட உணவை உட்கொண்டு அதனை அளித்ததற்காக இறைவனுக்கு நன்றி செலுத்துவ தும் ஒருவகை வணக்கமே எனத் திருக்குர்ஆன் கூறுகிறது. ''மன மகிழ்ச்சியோடு ஒரு கவளம் உணவை மனைவிக்கு ஊட்டுவதும் இறைவனது வெகுமதியைப் பெற்றுக் கொள் ளத்தக்க நற்கருமமே'' என நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் நவின்றனர். ''இறைவன் அனுமதித்துள்ள வழிவகைகளைக் கையாண்டு தனது ஆசைகளை நிறைவேற்றிக் கொள்பவ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

னுக்கு இறைவனது வெகுமதியுண்டு'' எனத் திருத்தூதர் கூறியபோது, ஒருவர் குறுக்கிட்டு ''நாயகமே, ஆயினும் அவர் தனது ஆசையை அல்லவா தணித்துக் கொள்கிறார்?'' எனக் கேட்டார். அதற்கு, ''தனது இச்சையைத் தீர்த்துக் கொள்ள தவறான முறையை மேற்கொண்டிருந்தால் அவர் தண்டிக்கப்படுவார். அவ்வாறாயின் அனுமதிக்கப்பட்டுள்ள முறையில் ஆசையைத் தீர்த்துக் கொள்பவருக்கு ஏன் வெகுமதியளிக்கப்படக் கூடாது?'' எனப் பதில் கிடைத்தது.

இஸ்லாம் சகலவற்றையும் துறந்து மறுமைக்காக மட்டுமே வாழாமல், இவ்வுலக வாழ்வையும் சிறப்புற அமைத்துக் கொள்ள வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்துகிறது. இஃது ஒழுக்க நெறிகளுக்குப் புதிய கருத்தையளித்தது. இஸ்லாம் மனித சமுதாயத்தின் நாளாந்த வாழ்க்கை சம்பந்தமான பொது உறவுகள் மீது செலுத்தும் ஆழ்ந்த செல்வாக்கு, மக்கள் மீது அதற்குள்ள அதிகாரம், கடமைகள், உரிமைகளை அது நெறிப்படுத்தும் தன்மை, படிக்காத பட்டிக்காட்டானும் மதிநுட்பமிக்க தத்துவஞானியும் ஒருங்கே பின்பற்றத்தக்க அதன் போக்கு என்பன இஸ்லாத்தின் இறைதூதர் அவர்களது போதனையின் சிறப்பியல்புகளாகும்.

ஆனால் ஒரு விஷயத்தை நன்றாய் மனதில் பதித்துக் கொள்ள வேண்டும். அதாவது இஸ்லாம், நற்செயல்களுக்குக் கொடுக்கும் இவ்வழுத்தம் சரியான நம்பிக்கையை அடித்தளமாகக் கொண்டதாகும். செயல்கள் மீது அக்கறை கொள்ளாமல் நம்பிக்கையைப் போற்றும் சிந்தனைப் போக்குகளும், நம்பிக்கையைச் சட்டை செய்யாமல் நற்செயல்களுக்கு அழுத்தம் கொடுக்கும் சிந்தனைப்போக்குகளும் உள்ளன. ஆனால் இஸ்லாம் சரியான நம்பிக்கையையும் சரியான செயல்களையும் அடித்தளமாகக் கொண்டதாகும். குறிக்கோள்கள் எத்துணை முக்கியமானவையோ அவற்றை அடையும் வழிவகைகளும் அத்துணை முக்கியமானவையே. இவை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரண்டும் ஒன்றிலிருந்து ஒன்றைப் பிரிக்க முடியாதவாறு இணைந்தவையாகும். இரண்டும் ஒன்றிணைந்தால் செழித்தோங்குகின்றன; பிரிந்து விட்டால் உக்கி மடிக்கின்றன. இஸ்லாத்தில் நம்பிக்கையைச் செயலிலிருந்து பிரித்தெடுக்க முடியாது. சரியான நம்பிக்கையே சரியான செயலாகப் பரிணமித்து, சரியான பெறுபேற்றைக் கொண்டு வருகிறது. ''யார் நம்பிக்கை கொண்டு நற்கருமங்களையும் புரிகிறார்களோ அவர்களே சுவனம் புகுவர்'' என்ற கருத்துப்படும் இறை வசனங்களை திருக்குர்ஆனில் அடிக்கடி காணலாம். இவை திருமறையில் ஐம்பதுக்கும் மேற்பட்ட இடங்களில் திரும்பத் திரும்ப சொல்லப்பட்டுள்ளன. ஆழ்ந்த சிந்தனைக்கு ஊக்கமளிக்கப்படுகிறது. ஆனால் சிந்தித்தால் மட்டும் போதாது; இலட்சியம் அதுவல்ல. நம்பிக்கை பூண்டும் செயலற்றிருப்போருக்கு இஸ்லாத்தில் இடமில்லை. இதுபோன்றே நம்பிக்கையிருந்தும் தவறிழைப்பவர்களின் நிலையை சிந்தித்துப் பார்க்கவே முடியாது. இறைவனின் சட்டங்கள் செயல் பற்றியவை, இலட்சியங்கள் பற்றியவையல்ல. அவை செயல் வடிவிலானவை. அவை மனிதனை அறிவிலிருந்து செயலுக்கும் செயலிலிருந்து திருப்திக்கும் இட்டுச் செல்லும் சாசுவதமான முன்னேற்றப்பாதையைக் கோடிட்டுக் காட்டுகின்றன.

சரியான செயல்களை இயல்பாகவே தோற்றுவித்து பூரண திருப்தியைத் தரவல்ல அந்த நம்பிக்கை எது? இங்குதான் இஸ்லாத்தின் அரிய தத்துவமே அடங்கியிருக்கிறது. அல்லாஹ்வைத் தவிர வேறு இறைவனில்லை என்ற அந்த அடிப்படை நம்பிக்க மீதுதான் இஸ்லாத்தின் போதனைகளும் சாதனைகளும் நிலைபெற்றுள்ளன. அவனுக்கு நிகரானோர் யாருமிலர்; தெய்விகப் பண்புகளில் அவனை நிகர்த்தாரும் யாருமிலர்.

இறைவனது பண்புகளைப் பொறுத்தவரையும், ஏனைய விஷயங்களைப் போலவே இஸ்லாம் நடுவழியைப் பின்பற்றுகிறது. அஃது இறைவனை சடப் பொருள் எதற்கும் ஒப்பிடும் கருத்து எதனையும் ஏற்பதில்லை. கண்ட, கேட்ட பண்புகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லாம் அவனில் பொதிந்துள்ளன என்ற கருத்தையும் தவிர்க்கின்றது. அல் குர்ஆன், ஒருபுறம் அவனைப் போன்ற எதுவுமில்லை என்று கூறுகிறது; மறுபுறம் அவன் பார்ப்பவன், கேட்பவன், அனைத்தையும் அறிபவன் என்று கூறுகிறது. அவன் எக்குற்றங் குறையுமற்ற பேரரசன். அவனது பேராற்றல் எனும் கப்பல் நீதி, நியாயம் என்ற பெருங்கடலில் மிதந்து செல்கிறது. அவன் அளவற்ற அருளாளன்; நிகரற்ற அன்புடையவன். அவனே யாவரதும் பாதுகாவலன். இஸ்லாம், இறைவனுக்கு நேரிடையாக உள்ள இந்த இயல்புகளோடு நின்றுவிடாது, எதிரிடையான இயல்புகளையும் எடுத்துக் காட்டுகிறது. அதாவது, எதற்கும் வேறு பாதுகாவலன் எவருமிலன். அல்லாஹ்வைத் தவிர வேறு இறைவன் இல்லை. அவனே உடல்களைப் படைத்தவன்; உயிர்களைப் படைத்தவன் அவன் நியாயத் தீர்ப்பு நாளின் அதிபதியுமாவான். திருமறையின் கருத்துப்பட இதனைச் சொல்வதானால், உன்னதமான சிறப்பியல்புகள் அனைத்தும் அவனுக்கேயுண்டு.

மனிதனுக்கும் பிரபஞ்சத்திற்குமுள்ள தொடர்பு பற்றி திருக்குர்ஆன் பின்வருமாறு கூறுகிறது: ''இறைவன் பூமியிலும், பிரபஞ்சத்திலுமுள்ள யாவையும் உங்களுக்கு வசப்படுத்தித் தந்துள்ளான்'' மேலும், உங்களில் யாருடைய செயல்கள் நல்லவை என்றும் யார் நேரிய வழியிலிருந்து பிறழ்ந்து செல்கிறார்கள் என்றும் பார்ப்பதற்காக அவன் உங்களுக்குச் சிறந்த ஆற்றல்களை அளித்து, வாழ்வையும் மரணத்தையும் படைத்துள்ளான் என்றும் திருமறை சொல்கிறது.

ஒவ்வொருவருக்கும் தாம் நினைத்தவாறு நடப்பதற்கு ஓரளவுக்குச் சுதந்திரமிருக்கிறது. ஆயினும் மனிதன் தனது கட்டுப்பாட்டுக்கு அப்பாற்பட்ட சில சூழ்நிலைகளிற் பிறந்து தனது கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்ட சில சூழ்நிலைகளில் வாழ்கிறான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இஸ்லாமிய நோக்கில் இதுபற்றி இறைவன் பின்வருமாறு கூறுகிறன். ''எம்மனிதனையும், நான் சிறந்தது எனக்கருதும் நிலையில் படைப்பது எனது விருப்பத்தைப் பொறுத்தது. பிரபஞ்சத் திட்டங்களை அற்ப ஆயுள் படைத்த மனிதன் அறிந்து கொள்ள முடியாது. இன்பத்திலும் துன்பத்திலும் சுகத்திலும் நோயிலும், உயர்விலும் தாழ்விலும் உங்களைச் சோதிப்பேன். எனது சோதனை முறையானது ஆளுக்கு ஆள், நேரத்திற்கு நேரம் வேறுபடும். கஷ்டத்தைக்கண்டு மனந் தளர்ந்து விடாதீர்கள். அதனைப் போக்கிக் கொள்ள சட்ட விரோதமான முறைகளைத் தேர்ந்தெடுக்காதீர்கள். அவ்வாறே சுபீட்சமாக இருக்கும்போது இறைவனை மறந்து விடாதீர்கள். இறைவனது அருட்கொடைகள் உங்களிடம் நம்பிக்கைப் பொறுப்பாகவே ஒப்படைக்கப்பட்டுள்ளன. உங்களுக்கு எப்போதுமே சோதனை நடந்தவண்ணமேயிருக்கிறது. ஒவ்வொரு கணமும் நீங்கள் சோதனைக்குள்ளாகிறீர்கள். இப்புவி வாழ்க்கையில் 'ஏன், எதற்கு என்று கேட்பதற்கு இடமில்லை, சொல்வதைச் செய்துவிட்டு இறப்பதே மேல்' நீங்கள் உயிர் வாழ்வதானல் இறைவனுக்குப் பொருத்தமாக வாழுங்கள். நீங்கள் மரணிப்பதானலும் இறைவழியிலேயே மரணியுங்கள்'' இதனை நீங்கள் 'தலைவிதி' என்று கூறலாம். ஆனல் இத்தகைய விதி எப்பொழுதும் உங்களை விழிப்புணர்ச்சியோடு இருந்து செயலாற்றத் தூண்டுவதற்குரிய ஒரு நிபந்தனையாகும்.

இவ்வுலக வாழ்க்கையோடு உங்களது ஆயுள் முற்றுப் பெற்றுவிடுகிறது என்ற முடிவுக்கு வந்து விடாதீர்கள். மரணத்தின் பின்னர் ஒரு வாழ்க்கையுண்டு. அதுவே நிரந்தரமானது. மறுவுலக வாழ்க்கை புவி வாழ்க்கையின் ஒரு தொடர்ச்சியாகும். அதிலிருந்துதான் உண்மை வாழ்வின் மர்மம் துலங்கவாரம்பிக்கும். வாழ்வில் புரியும் ஒவ்வொரு செயலும் அது முக்கியம் அற்றதாயிருந்தபோதிலும் ஒரு நிரந்தர விளைவை ஏற்படுத்தி விடுகிறது. அஃது எவ்வாறே சரியாகப் பதிவு செய்யப்படுகிறது. இறைவனின் வழிமுறை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களில் சிலவற்றை நீங்கள் அறிவீர்கள்; பலவற்றை அறியா திருக்கிறீர்கள். அவை உங்களுக்கு மறைக்கப்பட்டுள்ளன. இவ்வுலகில் உங்களில் எவை மறைந்திருந்தனவோ 'உங்களி லிருந்து எவை மறைக்கப்பட்டிருந்தனவோ அவையாவும் மறுஉலகில் உங்கள் முன்னிலேயில் திறந்து விரிக்கப்படும். நன்மை செய்தவர்கள் அவற்றின் பலனை அங்கே கண்டு கொள்வீர்கள். கண்ணுல் கண்டோ, காதால் கேட்டோ, கற்பனையில் உதித்தோ இராத வகையில் இறைவனின் அரு ளைச் சுகிப்பீர்கள். அத்தகையோர் மேலும் மேலும் உயர் நிலைகளுக்கு இட்டுச்செல்லப்படுவீர்கள். இறை சட்டத்தின் கீழ் இவ்வுலக வாழ்க்கையில் தமக்கு வாய்ந்த சந்தர்ப்பங்களைத் தவறவிட்டவர்கள் தண்டிக்கப்படுவீர்கள். நீங்கள் இழைத்த தவறுகளுக்கு அங்கே துன்பமனுபவிப்பீர்கள். உங்களது சொந்தக் கரங்களாலேயே நீங்கள் தேடிக்கொண்ட ஆன்மிக வியாதிக்கு அங்கு "உரிய சிகிச்சை" அளிக்கப்படும். எச்ச ரிக்கையாயிருங்கள். அது மிகப் பயங்கரமான அனுபவமாயிருக் கும். சித்திரவதை என்பது உடலுக்கு வேதனை தருவது, அதனை ஒருவாறு சகித்துக் கொள்ளலாம். ஆனுல் ஆன்மா வுக்கு அளிக்கப்படும் நோவினையோ மிகக் கடுமையானது. அதனை உங்களால் சகித்துக் கொள்ளவே முடியாது. ஆன் மாவை தீமைக்கு இட்டுச்செல்லும் உள்ளத்து உணர்ச்சிகளை எதிர்த்து இந்த உலகிலேயே போராடுங்கள். உங்கள் மனச் சான்று உங்கள் குறைகளை உங்களுக்கு உணர்த்தி, அதன் பயனுக ஒழுக்க மேம்பாடடைய உங்கள் ஆன்மா ஆவல் கொண்டு, இறைவனுக்கு கீழ்ப்படிய நீங்கள் மறுப்பதை எதிர்த்து கலகம் செய்யும்போது நீங்கள் அடுத்த கட்டத்தை அடைகிறீர்கள். இக்கட்டம், ஆன்மா அமைதியுற்று, இறை வனில் திருப்திகண்டு, அவனிலேயே மகிழ்ச்சியடையும் இறு திக்கட்டத்துக்கு உங்களை இட்டுச் செல்லும். இந்நிலையில் ஆன்மாவுக்குள்ள தடுமாற்றம் அகன்றுவிடும். போராட்ட நிலைமை நீங்கிவிடும். எல்லாச் சிக்கல்களும் தீர்ந்து விடும். சத்தியம் வெற்றிபெறும்; அசத்தியம் அழிந்தே தீரும். அல் லாஹ்வுக்கு முற்றிலும் அடிபணியும் போது மறைந்துள்ள

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆற்றல்கள் அத்தனையும் வெளிப்படும். ஆன்மா நிம்மதியடையும். இறைவன் உங்களை நோக்கி ''ஏ ஆன்மாவே, அமைதிபெறு. உனது இறைவனிடத்திலேயே உண்மையான நிம்மதியுண்டு. நீ என்னைப் பொருந்திக் கொண்டாய். நான் உன்னைப் பொருந்திக் கொண்டேன். ஏனைய அடியார்களோடு சேர்ந்து எனது சுவனபதியில் நுழைந்து விடுவாயாக'' எனக் கூறுவான்.

மனிதனின் இறுதி இலட்சியமும் இதுவே. ஒரு புறம் இப்பிரபஞ்சத்தினை ஆளும் நிலையை அடைவதும்; மறுபுறம் அவனது ஆன்மா அதன் எஜமானன் சந்நிதியில் அமைதியடைய, அவனது இரட்சகனான இறைவன் அவனில் உவகையுறுவதும், அவன் தனது இறைவன் சந்நிதானத்தில் இன்பம் காண்பதுமே மனிதனின் மகோன்னத இலட்சியமாகும். இதனால் விளைவது மனத்திருப்தி, பூரணமனத்திருப்தி; மன நிறைவு, முழுமையான மனநிறைவு; அமைதி, பூரண அமைதி! இந்நிலையில் இறைகாதலே மனிதனின் உணவு; அவன் வாழ்க்கையின் ஊற்றுக் கண்ணிலேயே ஊறித்திளைக்கிறான். ஏமாற்றமும், கவலையும் அவனை ஆட்கொள்ள மாட்டா. வெற்றியில் அவன் தற்பெருமை கொள்ள மாட்டான்.

இவ்வாழ்க்கைத் தத்துவத்தைக் கண்டு ஆச்சரியமடைந்த தோமஸ் கார்லைல் இவ்வாறு எழுதுகிறார். ''அடுத்து இஸ்லாம் கூறுகிறது— நாம் இறைவனிடம் சரணடைய வேண்டும். அவன் (இறைவன்) எமக்கு எதைச் செய்தாலும் அவன் எமக்கு அருள்வது-அது மரணமேயானாலும்-அதுவே நல்லது; அதுவே மிகச் சிறந்தது. அவனிடம் பூரணமாகச் சரணடைவதிலேயே எமது சக்திகள் அனைத்தும் தங்கியுள்ளன.''

★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிறமத அறிஞர் பார்வையில் அல்லாஹ்வின் தூதர்

## ✱ கிரிஸ்தவ அறிஞர் மைக்கல் எச். ஹார்ட்

''உலகில் அதிகம் செல்வாக்குள்ள மனிதர்களுள் முதன்மையானவராய் முஹம்மத் நபியவர்களை நான் தெரிவு செய்தது வாசகர்களில் சிலருக்கு வியப்பாயும், ஏனையோருக்கு கேள்விக்குரியதாயும் இருக்கலாம். ஆனால் வரலாற்றை உற்று நோக்கினால் ஆன்மிகம், லௌகிகம் ஆகிய இரு நிலைகளிலும் வெகு சிறப்பாக வெற்றியீட்டிய மனிதர் அவர் ஒருவர் மட்டுமே!''

நூல்: ''100 (பேர்) வரலாற்றில் மிகச் செல்வாக்குள்ள மனிதர்களின் வரிசைக் கிரமம்''.

(The 100 A Ranking of the most Influential Persons in History)

## ✱ பௌத்த அறிஞர் பேராசிரியர் மைத்திரி மூர்த்தி

''எந்த மதத் தலைவரையும் விட மகத்தான வெற்றியீட்டியவர் என முஹம்மத் (ஸல்) அவர்களை மதிப்பிட்டால் மிகையாகாது. அவர், தாம் போதித்த இஸ்லாத்தின்படி ஒப்புவமையற்றதொரு சமூக அமைப்பைக் கட்டியெழுப்பி அதனைத் தமது கண்களாலேயே கண்டார் என்பது வரலாறு கூறும் உண்மை. அவர்களது போதனைகள் அரபு நாட்டுக்கு மட்டுமன்றி, அனைத்துலகுக்கும் பொருத்தமானவை. அவர்கள் வெறுமனே மதத்தலைவர் மட்டுமல்லர்; மனிதனின் முழு வாழ்வையும் சீரமைக்கும் சிறப்பான கொள்கையைத் தந்த சமுதாயத் தலைவருமாவார்''.

நூல் : ''மதமும் மடிந்த உலகமும்''
(ආගම හා මියගිය ලෝකය)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முஹம்மத் (ஸல்) அவர்கள் ..

மக்கள், முஹம்மத் (ஸல்) அவர்களை பல்வேறு கோணங்களிலிருந்து நோக்குகின்றனர்.

சிலரது பார்வையில் அவர்கள் ஓர் ஆன்மிகப் போதகர்.

மற்றும் சிலரது பார்வையில் அவர்கள் ஓர் அரசியல் தலைவர்.

வேறு சிலரது நோக்கில் அவர்கள் ஒரு சமூக சீர்திருத்தவாதி.

இன்னும் சிலரது கண்களுக்கு அவர்கள் ஓர் அரபுத் தலைவர்

. . . . . .

ஆனால்,

அவர்களோ மனித சமுதாயத்துக்கு முழுமையான விமோசனம் பெற்றுக் கொடுக்கவந்த விடுதலைவீரர்.

மனிதனை, மற்ற மனிதர்களுக்கோ ஏனைய சிருஷ்டிப் பொருள்களுக்கோ அடிமையாவதிலிருந்து விடுவித்து, எல்லாம் வல்ல அல்லாஹ்வின் உண்மை அடியானாக ஆக்குவதும், எல்லாவிதமான சுரண்டல்களிலிருந்தும், சமயத்தின் பெயரால் நடைபெறும் அநீதிகளிலிருந்தும், குறுகிய உலகாயத சிந்தனைகளின் செல்வாக்கிலிருந்தும் அவனை விடுவிப்பதுமே அன்னாரின் இலட்சியம்!

முஹம்மத் (ஸல்) அவர்களை இவ்வாறான ஒரு பூரண இலட்சிய புருஷராகவும் மனித சமுதாயத்தின் விடுதலைக்கு வழிவகுத்த அல்லாஹ்வின் தூதர்களில் இறுதியானவராகவும் நோக்குவதே அன்னாரைப் பற்றிய சரியான மதிப்பீடாகும்.

PRINTED AT: IPG PRINTING PRESS

320, K. M. M. ISHAK MAWATHA, COLOMBO-9.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org